Vlambaram - March 01, 2025.qxp_Vlambaram-Front 2025-02-28 7:11 PM Page 1

கனடாவின் மூத்த தமிழ் இதழ் | விளம்பரம்™ • VLAMBARAM™ | Canada's Oldest Tamil Newspaper

35ஆவது ஆண்டில்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
விளம்பரம்
VLAMBARAM
email: vlambaram@sympatico.ca   Tel: 416-282-8059   www.vlambaram.com

நதி: 35   பாலம்: 05   சமூக முன்னேற்றப்பத்திரிகை   மாதமிருமுறை   இலவசம்   MARCH 01, 2025

Your Real Estate Investment Consultant
Dedicated for your success
OPPURTUNITIES ARE WAITING...
CALL ME FOR A FREE CONSULTATION
BUY SELL INVEST
DIVAGARAN MANIKKAVASAGAR Realtor
416.888.7877
HomeLife/GTA Realty Inc., Brokerage
www.divhomes.com

துரித பணமாற்றுச் சேவை
மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave. E. Suite #3
(Eglinton & Markham)
Scarborough ON M1J 2H6
Tel: 416-267-8221
எமக்கு வேறு கிளைகள் எங்கும் இல்லை

# கனடிய லிபரல் கட்சியின் தலைவருக்கான தேர்தல்

கனடிய லிபரல் கட்சியின் தலைவர் தெரிவிற்கான விவாதம் பிரஞ்ச் மொழியில் 2024 பெப்பிரவரி 24ஆம் திகதியும் ஆங்கில மொழியில் 2024 பெப்பிரவரி 25ஆம் திகதியும் மொன்றியல் நகரில் நடைபெற்றது.

கனடாவின் தற்போதைய பிரதமரான ஜஸ்ரின் ரூடோ, லிபரல் கட்சித் தலைவர் பதவியிலிருந்தும் கனடியப் பிரதமர் பதவியில் இருந்தும் தான் விலகுவதாக 2025 ஜனவரி 6ஆம் திகதி அறிவித்திருந்தார். அப்போது அவர் லிபரல் கட்சியின் புதிய தலைவரைத் தெரிவு செய்யும்வரை தான் தொடர்ந்தும் லிபரல் கட்சியின் தலைவராகவும் நாட்டின் பிரதமராகவும் இருப்பதாக அறிவித்திருந்தார். அதைத் தொடர்ந்து கனடிய லிபரல் கட்சி தமது புதிய தலைவரை மார்ச் 9ஆம் திகதி தேர்ந்தெடுக்கும் என அறிவித்தது. அவர் கனடாவின் அடுத்த பிரதமராகப் பதவியேற்பதுடன் 2025ஆம் ஆண்டு நடைபெற இருக்கும் கனடிய மத்திய அரசிற்கான பொதுத்தேர்தலில் கனடிய லிபரல் கட்சியை வழி நடத்துவார் எனவும் அறிவிக்கப்பட்டது.

லிபரல் கட்சி இம்முறை தலைமைப் பதவிக்குப் போட்டியிடுவதற்கு வேட்பாளர்கள் ஜனவரி 23ஆம் திகதிக்கு முன்னர் பதிவு செய்ய வேண்டும் எனவும் பதிவுக் கட்டணமாக $350,000 செலுத்த வேண்டும் எனவும் அறிவித்திருந்தது. அத்துடன் லிபரல் கட்சியின் தலைவரை தெரிவு செய்யும் தேர்தலில் வாக்களிக்கத் தகுதி பெறுவதற்கு ஒருவர் ஜனவரி 27ஆம் திகதிக்கு முன்னர் லிபரல் கட்சி உறுப்பினராகச் சேர்ந்திருக்க வேண்டும் எனத் தெரிவித்திருந்தது.

லிபரல் கட்சியின் தலைமைப் பதவிக்குப் போட்டியிடும் வேட்பாளர்கள் $350,000 பதிவுக்கட்டணத்தையும் நான்கு தவணையில் $50,000, $50,000, $125,000, $125,000ஆக ஜனவரி 23ஆம் திகதியில் இருந்து பெப்பிரவரி 17ஆம் திகதிக்கு முன்னர் கட்ட வேண்டும். இவ்வாறு பணத்தைச் செலுத்திப் பதிவு செய்யும் கட்சியின் தலைமைப் பதவிக்குப் போட்டியிடும் வேட்பாளர் கட்சியின் அனைத்துப் போட்டி விதிகளையும் தவறாமல் பின்பற்றி இருந்தால் அவரின் பதிவுக் கட்டணத்தில் முதலில் செலுத்திய $50,000 மட்டுமே தேர்தல் முடிவின் பின்னர் திருப்பிக் கொடுக்கப்படும். இவ்வாறு கனடிய வரலாற்றிலேயே கட்சித்தலைவர் பதவிக்கு அதிகபட்ச பதிவுக்கட்டணத்தை லிபரல் கட்சி நிர்ணயித்ததிற்கு முக்கிய காரணம் வலுவான நிதி திரட்டும் வல்லமையுடைய, தலைமைப் பதவிக்கு வர விரும்பும் தீவிர விருப்பம் உள்ள வேட்பாளர்கள் மட்டுமே போட்டியில் நுழைவதை உறுதி செய்வதற்கேயாகும்.



Karina Gould, Mark Carney, Chrystia Freeland and Frank Baylis

Thanks: The Canadian Press/Christinne Muschi

லிபரல் கட்சியின் தலைவரைத் தெரிவு செய்வதற்கான தேர்தலில் வாக்களிக்க 14 வயதிற்கு மேற்பட்ட, கனடிய குடியுரிமை அல்லது நிரந்தர வதிவிட உரிமை உள்ள எவரும் ஜனவரி 27ஆம் திகதிக்கு முன்னர் லிபரல் கட்சியில் உறுப்பினராக சேர்ந்திருத்தல் வேண்டும் என்பது மட்டுமே நிபந்தனையாகும். லிபரல் கட்சியில் உறுப்பினராகச் சேர எவ்வித கட்டணமும் செலுத்தத் தேவையில்லை. லிபரல் கட்சி ஜனவரி 30ஆம் திகதி ஊடகங்களுக்கு வெளியிட்ட தகவலில் லிபரல் கட்சியின் தலைவரைத் தெரிவு செய்ய 400,000 பேர் லிபரல் கட்சியின் உறுப்பினர்களாக ஜனவரி 27ஆம் திகதிக்கு முன்னர் பதிவு செய்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. கனடாவின் சனத்தொகை 41 மில்லியன் என்பது குறிப்பிடத்தக்கது.

பிரிட்டன் மற்றும் அவுஸ்ரேலியாவில் நாட்டின் பிரதமரை நாடாளுமன்றத்தில் அதிக ஆசனங்கள் பெற்ற கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களே தெரிவு செய்வர். அதனால் அந்நாடுகளில் பிரதமரை பதவி நீக்குவதும் இலகுவானது.

கனடாவில் ஓர் அரசியல் கட்சியின் தலைவரை அக்கட்சியின் உறுப்பினர்களே தெரிவு செய்வர். பின்னர் அவரது கட்சி நாடாளுமன்றத்தில் அதிக ஆசனங்களை வைத்திருந்தால் அக்கட்சியின் தலைவர் பிரதமராகப் பதவியேற்பார். இதனால் கனடாவில் பிரதமரின் பதவி விலகல் தானாகவே கட்சித்தலைமைப் பதவியைத் தெரிவு செய்யும் தேர்தல் ஒன்றை உருவாக்கும். தற்போது இவ்வாறு லிபரல் கட்சியின் தலைவராகத் தெரிவு செய்யப்படுபவர் அவரது கட்சி கனடாவில் ஆளுங்கட்சியாக இருப்பதால் புதிய பிரதமராகவும் அவர் பதவியேற்பார்.

லிபரல் கட்சியின் தலைமைப் பதவிக்குப் போட்டியிடப் பதிவு செய்வதற்கு வேட்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ள பதிவுக் கட்டணத்தை செலுத்துவதுடன் 300 லிபரல் கட்சி உறுப்பினர்களிடம் இருந்து ஆதரவுக் கையெழுத்தும் பெற்றிருக்க வேண்டும். அத்துடன் அவ்வாறு கையெழுத்திட்ட லிபரல் கட்சி உறுப்பினர்கள் குறைந்தது கனடாவின் மூன்று மாகாணங்கள் அல்லது பிரதேசங்களைச் சேர்ந்தவர்களாகவும் இருக்க வேண்டும்.

தலைவர் தெரிவிக்கு வாக்களிப்பவர்கள் தமது விருப்பத்தை வரிசைக் கிரமத்தில் வாக்குச்சீட்டில் (Ranked Ballot) பதிவிடலாம். தலைவர் தெரிவு கனடா முழுவதிலும் உள்ள 343 தொகுதியிலும், ஒவ்வொரு தொகுதியிலும் எல்லா வேட்பாளர்களுக்கும் விழும் மொத்த வாக்குகள் 100 புள்ளிகள் எனக் கொண்டு அவரவர்க்கு விழுந்தவாக்கு எண்ணிக்கைக்கு ஏற்ப புள்ளிகள் வழங்கப்படும்.

அதாவது ஒரு தொகுதியில் விழுந்த மொத்த வாக்குகளில் ஒருவருக்கு 60%, மற்றவருக்கு 30%, மூன்றாமவருக்கு 10% கிடைத்திருந்தால் அவர்களுக்கு முறையே 60, 30, 10 எனப் புள்ளிகள் வழங்கப்படும். இவ்வாறு 343 தொகுதிகளிலும் தனித்தனியே புள்ளிகள் வழங்கப்பட்டே வாக்குகள் எண்ணப்படும்.

இதனால் எவ்வளவு வாக்குகள் இத்தேர்தலில் அளிக்கப்பட்டிருந்தாலும் வழங்கப்படும் மொத்தப் புள்ளிகள் 34,300 (343 x 100) புள்ளிகள் ஆகும். இதில் 17,151 புள்ளிகளைப் பெற்றவரே கட்சியின் தலைவராகத் தெரிவு செய்யப்படுவர்.

வாக்களிப்பவர்களது முதல் தெரிவில் ஒருவர் 17,151 புள்ளிகள் பெறாவிட்டால் குறைந்த புள்ளிகளைப் பெற்ற வேட்பாளர் தேர்தலில் இருந்து விலக்கப்பட்டு அவருக்கு விழுந்த வாக்குகள் வாக்களித்தவரின் இரண்டாவது விருப்பத்துக்கு அளிக்கப்பட்டு மீண்டும் ஒவ்வொரு தொகுதியிலும் வாக்குகளைத் திரும்ப எண்ணுவதன் மூலம் 100 புள்ளிகளும் பகிரப்படும். இவ்வாறு மீண்டும், மீண்டும் குறைந்த புள்ளிகளைப் பெற்ற வேட்பாளரை நீக்குவதன்மூலம் ஒருவர் 17,151 புள்ளிகள் பெறும்வரை வாக்கு எண்ணுதல் நடைபெறும்.

இம்முறை மூலம் ஒரு வேட்பாளர் அதிக எண்ணிக்கையான ஆதரவாளர்களை தனது சொந்த இடத்தில் சேர்ப்பதன் மூலம் தலைவராகத் தெரிவு செய்யப்படுவது தவிர்க்கப்படுகிறது. கட்சித் தலைவராகத் தெரிவு செய்யப்பட ஒருவருக்கு நாடு முழுவதும் (எல்லாத்

தொடர்ச்சி 05ஆம் பக்கம்

Homelife GTA Realty
BUY/ SELL /LEASE
www.vanyhome.ca/
Life Insurance & Super Visa Insurance
www.vjsfinancial.ca
Vany Jeganmohan CLU,CHS
REALTOR & INSURANCE ADVISOR
416-670-7436
Real Estate  Insurance

HOMELIFE
HOME LIFE / GTA REALTY INC BROKERAGE
வீடு வாடகைக்கு வாங்க மற்றும் விற்க அழையுங்கள்
www.ParaCity.ca
647-296-0596
TisiPara@gmail.com
Para Tisikulasingam
647 296 0596

FOR ALL YOUR REAL ESTATE NEEDS
GEORGE PARANTHAMAN
georgeparan1@gmail.com
416-277-9044
HomeLife GTA Realty Inc. Brokerage*
5215 Finch Ave.E. #203, Toronto ON. M1S 0C2
B: 416.321.6969 F: 416.321.6963
*Independently Owned & Operated
TRUTH BUILDS TRUST

Vlambaram - March 01, 2025.qxp_Vlambaram-Front 2025-02-28 7:11 PM Page 2



# தமிழ் கட்சிகள் தாண்ட வேண்டிய தடைகள்

– முகிலன் –

தமிழ் தேசியக் கட்சிகள் இப்பொழுது பல தடைகளைத் தாண்டவேண்டிய நிலையில் இருக்கின்றன.

தமிழரசுக் கட்சியைப் பொறுத்தவரையில் அது நீதிமன்றப் படிக்கட்டுகளைத் தாண்டி வெளியே வரவேண்டிய நிலையில் இருக்கிறது. அப்படி வெளியே வருவதற்கு அந்தக் கட்சிக்குள்ளேயே ஒரு தரப்பு விரும்பு கிறது, இன்னொரு தரப்பு அதனை விரும்பவில்லை.

அதேபோல வரப்போகும் உள்ளூராட்சித் தேர்தல்களும்கூட, தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு ஒரு தடை தாண்டல்தான்.

ஜனாதிபதித் தேர்தலில் பொதுவேட்பாளரை நிறுத்திய ஜனநாயகத் தமிழ் தேசியக் கூட்டணி, நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றிபெற முடியாமல் போனது.

இந்நிலையில் வரப்போகும் உள்ளூராட்சித் தேர்தலில் ஆசனங்களையும், சபைகளை யும் கைப்பற்றுவது மிக முக்கியமானது. இந்தத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கட்சிகளிடமிருந்து உள்ளூராட்சி சபை களைக் கைப்பற்றுகின்ற நிலை, தேசிய மக்கள் சக்திக்கு ஏற்படுமேயானால், அது தமிழ்த் தேசிய அரசியலில் மிகப்பெரிய வீழ்ச்சியாக இருக்கும். எனவேதான் இது அவர்களுக்கு ஒரு மிகப்பெரிய சவாலாக உள்ளது.

அதன்பின்னர், மாகாணசபைத் தேர்தலில் வெற்றி பெறுவதும் அவர்களுக்கு உள்ள மற்றொரு சிக்கல். இப்படித் தொடர் சிக்கல்களில் இருக்கின்ற தமிழ்த் தேசியக் கட்சிகள், பொதுவான அரசியல் மூலோபாயம் ஒன்றை வரைவதற்குத் தயாராக இல்லை.

நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பிறகு தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், பிற கட்சிகளை அனுசரித்துப் போகும் நிலைப்பாட்டுக்கு வந்தார். ஆனால் அதனை அவர் தேர்தலுக்கான முன்னேற்பாடாகவோ தேர்தலுக்கான கூட்டாகவோ முன்னெடுத்திருக்கவில்லை.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் புதிய அரசியலமைப்பு ஒன்றை கொண்டு வரப்போவதாகக் கூறுகின்ற நிலையில், அந்த அரசியலமைப்பு தயாரிப்பு முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றபோது, தமிழ்தரப்பு ஒரே நிலைப்பாட்டை எடுத்து, ஒரே தீர்வு யோசனையை முன்வைக்க வேண்டும் என்பதே அவரது இலக்கு.

அதற்காக தமிழரசுக் கட்சியின் நாடாளு மன்றக் குழுத் தலைவர் சிறீதரன் மற்றும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோருடன் பேச்சுக் களை நடத்தி ஓர் இணக்கப்பாட்டை ஏற்படுத்தினார்.

அடுத்த கட்டமாக இந்த மூன்று கட்சிகளும் இணைந்து தீர்வு யோசனை குறித்து ஆலோசனை நடத்தி, ஒரு வரைவைத் தயாரிக்கும் திட்டத்திற்குள் நுழைய வேண்டிய நிலை வந்தது. இந்தத் திட்டம் முன்வைக்கப்பட்டபோது தமிழரசுக் கட்சி அதற்குக் குறுக்கே நிற்கின்றது.

தமக்கு இது தொடர்பாக அழைப்பு விடுக்கப்படவில்லை என தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே. சிவஞானம் அறிவிக்க, உடனடியாக கஜேந்திரகுமார் அவரைச் சந்தித்து, அழைப்பு விடுத்தார். அதனைச் சாதகமாக அணுகுவதாகவும், கட்சியின் மத்திய குழுவில் ஆராய்ந்துவிட்டு பதில் அளிப்ப தாகவும் கூறி அனுப்பினார் சி.வி.கே.

ஆனால் தமிழரசுக் கட்சியின் மத்திய குழு இப்போதைக்கு அரசியலமைப்பு யோசனையை தயாரிக்கவேண்டிய தேவை இல்லை என முடிவு செய்திருக்கிறது.

தமிழரசுக் கட்சி சமஷ்டி நிலைப்பாட்டி லேயே இருப்பதாகவும், புதிய அரசியல் அமைப்பு உருவாக்க முயற்சி முன்னெடுக் கப்படுகின்றபோது, தமது கட்சியினால் உருவாக்கப்பட்டுள்ள அரசியலமைப்புக் குழு அதுபற்றிய ஆராயும் என்றும், தேவைப்பட்டால் பிறதரப்புகளுடன் ஆலோசனை நடத்தும் என்றும் தீர்மானம் எடுக்கப்பட்டிருக்கிறது.

இது கஜேந்திரகுமாரின் முயற்சிகளுக்கு ஆப்பு வைப்பதற்கான முடிவு என்பதில் சந்தேகம் இல்லை. தமிழரசுக் கட்சி அரசியலமைப்பு சார்ந்த விடயங்கள் எதுவும் தங்களை மீறி நடந்துவிடக் கூடாது என்பதில் உறுதியாக இருக்கிறது.

நாடாளுமன்றத் தேர்தலில் தோல்வி அடைந்தபின்னர், இதுபற்றிக் கேள்வி எழுப்பியபோது, சுமந்திரனிடம் கேள்வி எழுப்பியபோது தான் நாடாளுமன்றத்தில் இல்லா விட்டாலும் கஜேந்திரகுமார் இருக்கிறார், அவர் அதனை முன்னெடுத் துச் செல்வார் என்று கூறியிருந்தார். ஆனால் இப்பொழுது கஜேந்திரகுமார் அம்முயற்சியை எடுக்கின்றபோது அதற்கு, தமிழரசுக் கட்சி ஒத்துழைக்கவில்லை.

மத்திய கூட்டத்துக்குப் பிறகு, தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே. சிவஞானம் கஜேந்திரகுமாருக்கு ஒரு கடிதம் அனுப்பியிருக்கிறார்.

அதில் புதிய அரசியலமைப்பு தொடர்பான வேலையை அரசாங்கம் இன்னமும் ஆரம்பிக்காத நிலையில், அதுபற்றி இப்போது பேச வேண்டிய தேவையில்லை என்றும், நேரம் வரும்போது பார்த்துக் கொள்ளலாம் என்றும் குறிப்பிட்டிருக்கிறார். இந்தநிலையில் கஜேந்திரகுமார் தரப்பு, ஏனைய கட்சிகளுடன் கலந்தாலோசனை நடத்தி, தீர்வு யோசனை ஒன்றை தயாரிக்கும் முயற்சியில் இறங்க வேண்டிய நிலையில் இருக்கிறது.

அதேவேளை, உள்ளூராட்சித் தேர்தலும் நெருங்கி வந்து கொண்டிருக்கிறது. 2025 ஏப்ரல் மாதம் அது நடத்தப்படும் எனத் தெரிகிறது.

இந்தநிலையில் தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒருமித்து நிற்க வேண்டும் என்ற கருத்து இருந்தாலும், தமிழரசுக் கட்சியோ தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியோ, இன்னமும் அதற்கு இணங்கத் தயாராக இல்லை.

தமிழரசுக் கட்சியைப் பொறுத்தவரையில் உள்ளூராட்சித் தேர்தலில் தனித்தே போட்டியிடுவோம் என்ற நிலைப்பாட்டை எடுத்து விட்டது.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியைப் பொறுத்தவரையில், அது ஏற்கனவே ஒரு கோட்டை வரைந்துகொண்டு, தனியாக நிற்கிறது. இந்தச் சூழலில் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி சில்லறையாக சிதறிக் கிடந்த கட்சிகளையும் சுயேச்சைக் குழுக் களையும் ஒன்றிணைத்து ஒரு வலுவான அணியை உருவாக்க முயற்சிக்கிறது.

இதன் ஒரு கட்டமாக பெப்ரவரி 23, 2025 ஆம் திகதி நடந்த ஒரு கூட்டத்தில், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியில் ஏற்கனவே இடம்பெற்றுள்ள ரெலோ, புளொட், ஈபிஆர்எல்எவ், தமிழ்த் தேசியக் கட்சி, ஜனநாயகப் போராளிகள் கட்சி, ஆகியவற்றுடன் நாடாளுமன்றத்தேர்தலின் போது, தமிழரசுக் கட்சியுடன் முரண்பட்டுக் கொண்டு, சுயேட்சைக் குழுவாகப் போட்டி யிட்ட ஜனநாயகத் தமிழரசுக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய பசுமை இயக்கம் ஆகிய வற்றுடன் எட்டாவது தரப்பாக, சந்திரகுமார் தலைமையிலான சமத்துவக் கட்சியையும் சேர்த்துக் கொள்வதற்கு ஆலோசனை நடத்தப்பட்டுள்ளது.

சந்திரகுமார் ஈபிடிபியின் நாடாளுமன்ற உறுப்பினராக இரண்டு முறை பதவி வகித்தவர். அந்தக் கட்சியிலிருந்து விலகி, சமத்துவக் கட்சி என ஒரு கட்சியை உருவாக்கி, கிளிநொச்சியை மையப் படுத்தி செயற்படுகிறார்.

அங்கு, தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரனுக்கு நேரடிப் போட்டியான அரசியலை முன்னெடுத்து வருகிறார். அவரையோ அவரது கட்சியையோ இதுவரை காலமும் யாரும் தமிழ் தேசிய அரசியல் சக்தியாகப் பார்த்ததில்லை.

ஏனென்றால், ஈபிடிபி பின்புலமும், முற்றுமுழுதாக தெற்கு அரசியலை சார்ந்திருக்கும் அவரது அரசியலும், அரசுகளுடன் இணைந்த செயற்பாடு களும், அவரைத் தமிழ்த் தேசிய அரசியல்வாதியாக தமிழ்ச் சமூகம் பார்க்கின்ற நிலையை ஏற்படுத்தவில்லை. அப்படிப்பட்டவரை இந்தக் கூட்டுக்குள் கொண்டுவர முயற்சித்திருப்பது சர்ச்சை யையும் தோற்றுவித்திருக்கிறது.

சந்திரகுமாரின் சமத்துவக் கட்சி கடந்த ஜனாதிபதித் தேர்தலில், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி சங்கு சின்னத்தில் நிறுத்திய தமிழ் பொது வேட்பாளருக்கு ஆதரவளிக்காமல், சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவு அளித்தது.

அதுமாத்திரமன்றி, கடந்த பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து போட்டியிட்டிருந்தது.

இப்பொழுது அந்தக் கட்சி சங்கு சின்னத்தில் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிட முன்வந்திருப்பதை, புதிய கூட்டுக்குள் உள்வாங்க முயற்சிக்கப்படும் சில கட்சிகளுக்குப் பிடிக்கவில்லை.

தமிழ்த் தேசியக் கட்சிகளின் கூட்டு என வருகின்றபோது, தமிழ்த் தேசிய நிலைப் பாட்டில் அந்தக் கட்சிகள் இருக்க வேண்டும் என தமிழ் மக்களிடம் நிச்சயம் எதிர்பார்ப்பு இருக்கும். அதற்கு மாறான நிலைப்பாட்டை எடுத்து செயற்படுகின்ற, செயற்பட்ட கட்சிகளை இவ்வாறான ஒருமித்த நிலைப்பாட்டுக்குள் கொண்டு வருகின்றபோது கூட்டுச்செயல் திட்டங்கள், கூட்டணிகள் பலவீனமடையும்.

இந்தக் கூட்டணியில் தமிழரசுக் கட்சி இடம்பெறவில்லை. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் இடம்பெறவில்லை. ஆனாலும் இந்தக் கூட்டணியின் கதவு தமிழரசுக் கட்சிக்காகத் திறந்திருப்பதாக சமிக்ஞை காட்டப்பட்டிருக்கிறது. ஆனால் சிறிதரன் தமிழரசுக் கட்சியில் இருக்கும் வரைக்கும் சந்திரகுமாரின், இச்சமத்துவக் கட்சி இடம்பெற்றுள்ள கூட்டணியுடன் இணைந்து போட்டியிடும் வாய்ப்பு இருக்கப் போவதில்லை. அவ்வாறான நிலை வந்தால் சிறிதரன் கட்சியை விட்டு வெளியேறுவார். அந்த நிலை ஏற்பட்டால், தமிழரசுக் கட்சியுடன் தான் இணைந்து கொள்வேன் என சந்திரகுமார் கூறியிருக்கிறார்.

ஆக தமிழரசுக் கட்சிக்குள் சந்திர குமாரைக் கொண்டு வருவதற்கும், உள்ளே இருக்கும் சிறிதரனை வெளியே தள்ளுவதற்கும் இன்னொரு திட்டம் அரங்கேற்றப்படுவதாகத் தெரிகிறது. அதற்குப் பின்னால் யார் இருப்பார்கள், என்று புரிந்து கொள்வது கடினம் அல்ல.



Vlambaram - March 01, 2025.qxp_Vlambaram-Front 2025-02-28 7:11 PM Page 3





Available Till Midnight
Including Weekends & Holidays

ANTON
DHARMASEELAN
MORTGAE AGENT

#1 Mortgage Agent in GTA
#2 in Canada

CALL ME FIRST
FOR ALL YOUR MORTGAGE NEEDS

PURCHASE
REFINANCE
SELF EMPLOYED
BAD CREDIT
INVESTMENT PROPERTY
RENEWAL

MAJOR BANKS
ALTERNATIVE LENDERS
B LENDERS
CREDIT UNIONS
TRUST COMPANIES
PRIVATE LENDERS

416 704 1200

anton@myhomemls.ca

MORTGAGE ALLIANCE
Broker # 10530
#200, 2005 Sheppard Ave. E.
Toronto, ON M2J 5B4

FAX: 1 866 566 3068

# சவாலாக மாறியுள்ள படைகளும் பாதாள உலகமும்

## – அரவின் –

கடந்த செப்ரெம்பர் மாதம் ஆட்சிக்கு வந்த அனுரகுமார திசாநாயக்கவின் அரசாங்கத்துக்கு, அடுத்தடுத்து தேர்தல்கள் மாத்திரமன்றி, சவால்களும் வந்து கொண்டிருக்கின்றன.

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்ற அனுரகுமார திசாநாயக்க, அந்த வெற்றியை வைத்துக்கொண்டும், மக்கள் மத்தியில் காணப்பட்ட விரக்தி, கோபம், வெறுப்பு, எதிர்பார்ப்பு போன்றவற்றையும், முதலீடாக்கி நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்றுவிட்டார்.

இன்னும் இரண்டு மாதங்களில் உள்ளூராட்சித் தேர்தலை எதிர்கொள்ளப் போகின்ற, அரசாங்கத்துக்கு தொடர்ச்சியாக சவால்கள் வந்துகொண்டே இருக்கின்றன.

நாட்டின் பொருளாதார நிலைமை மேம்படவில்லை. அதனை மேம்படுத்துவதற்கு, அரசாங்கம் கடைப்பிடிக்கின்ற கொள்கை, சர்வதேச நாணய நிதியத்துடன் அது இணங்கிச் செல்லும் பாங்கு, எல்லாமே மக்களை ஏமாற்றத்துக்குள்ளாகி இருக்கிறது.

பொருளாதார ரீதியான நிவாரணங்களையும் மீட்சியையும் எதிர்பார்த்த மக்களுக்கு, அதனைச் சரியாக வழங்க முடியாதநிலையில் உள்ள என்பிபி அரசாங்கம், விலைவாசி உயர்வு, பொருட்களுக்கான தட்டுப்பாடு போன்ற அடிப்படைப் பிரச்சினைகளைச் சமாளிப்பதில் பல மாதங்களாக நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகிறது.

இந்தச் சூழலில், அண்மையில் ஏற்பட்ட மின்சார நெருக்கடி அதற்குப் பின்னர் தோன்றியுள்ள பாதாள உலக குழுக்களின் மோதல்கள், எல்லாமே அரசாங்கத்தின் பக்கம் எதிர்த்தரப்பு விரல் நீட்டுகின்ற சூழலை உருவாக்கியிருக்கிறது.

கொழும்பு புதுக்கடை நீதிமன்றத்துக்குள் குற்றவாளிக்கூண்டில் நின்ற ஒருவரை, நீதிபதிக்கு முன்பாகவே சுட்டுப் படுகொலை செய்து, பாதாள உலகம் தனது அதிகார எல்லையை உலகத்துக்கு நிரூபித்திருக்கிறது.

இலங்கையில் பாதாள உலக குழுக்களின் செயற்பாடுகள் மோசமடைந்திருக்கின்றன. முன்னொருபோதும் இல்லாத வகையில், நீதிமன்றத்துக்குள்ளேயே, அதுவும் 12 விசேட அதிரடிப்படையினர் பாதுகாப்பு வழங்கிக் கொண்டிருந்தபோதே அந்தப் படுகொலை அரங்கேற்றப்பட்டிருக்கிறது.




இது நீதித்துறைக்கு மாத்திரம் விடுக்கப்பட்ட சவால் அல்ல. அரசாங்கத்துக்கும் அரசாங்கப் பாதுகாப்புக் கட்டமைப்புகளுக்கும் விடுக்கப்பட்டிருக்கின்ற சவால்.

158 பாதாள உலகக் குழுக்கள் இலங்கையில் இயங்கிக் கொண்டிருப்பதாக கூறியிருக்கிறார் பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய. இந்தக் குழுக்களில், 1400 பேர் இயங்குகின்றனர் என்பது அவரது கணக்கு.

இவர்களை ஒடுக்கும் நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக அரசாங்கம் கூறிக் கொண்டாலும், அது ஒன்றும் இலகுவான காரியம் அல்ல.

நீதிமன்றத்துக்குள் படுகொலை இடம்பெற்றபிறகு இந்தக் குழுக்களை ஒடுக்குவதற்கு நடவடிக்கை எடுக்காமல் அரசாங்கத்தினால் இருக்கமுடியாது என்ற கட்டம் வந்துவிட்டது.

2024ஆம் ஆண்டில் மட்டும், 75 துப்பாக்கிச் சூட்டுக் கொலைகள் நிகழ்ந்திருப்பதாகவும், இந்த ஆண்டில் மாத்திரம் 17 துப்பாக்கிச் சூட்டு மரணங்கள் நிகழ்ந்திருக்கின்றன என்றும் பொலிஸ் தரப்பு கணக்குக் காட்டுகிறது.

அடுத்தடுத்து நிகழ்ந்து வருகின்ற இந்தக் கொலைகள் நாட்டின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலை ஏற்படுத்துவதாக எதிர்க்கட்சிகள் குற்றம்சாட்டிக் கொண்டிருந்தாலும், அரசாங்கம் அதனை ஏற்றுக் கொள்வதாக இல்லை.

நாட்டின் பாதுகாப்பில், எந்தக் குழப்பமும் இல்லை, பொதுமக்களுக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் கிடையாது என, அடித்துக் கூறும் அரசாங்கம், இது பாதாள உலக குழுக்களுக்கு இடையிலான மோதல் என்று அடையாளப்படுத்தி தட்டிக் கழிக்கவே முற்படுகிறது. ஆனால் உண்மை நிலை அதற்கு மாறானது.

கொல்லப்பட்டவர்கள் எல்லோருமே பாதாள உலகக் குழுக்களுடன் தொடர்புடையவர்கள் அல்ல.

சிலர் ஏன் கொல்லப்பட்டிருக்கின்றனர் என்று யாருக்கும் தெரியாத நிலை நீடிக்கிறது. அவர்கள் ஆள் மாறி கொலை செய்யப்பட்டிருக்கலாம். வேறொருவரைக் கொலை செய்வதற்குத் திட்டமிட்டு, இன்னொருவரைத் தீர்த்துக்கட்டி இருக்கலாம்.

அல்லது யாரையேனும், அச்சுறுத்துவதற்காகவோ, அரசாங்கத்துக்கு அச்சுறுத்தல் விடுக்கும் வகையிலோகூட அந்தக் கொலைகள் நிகழ்ந்திருக்கலாம்.

மித்தெனிய என்ற இடத்தில் தந்தையுடன் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த இரண்டு சிறு குழந்தைகளும் கொல்லப்பட்டிருக்கின்றனர்.

அதையெல்லாம் நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இல்லை என்றோ, தேசிய பாதுகாப்புக்கு அல்லது பொதுமக்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இல்லாத நிலை என்றோ வகைப்படுத்த முடியாது.

சட்டத்துக்குப் புறம்பாகப் படுகொலைகள் நிகழ்கிறது என்றால், அது ஒரு நாட்டின் பாதுகாப்புக் கட்டமைப்பின் பலவீனத்தையே சுட்டி நிற்கும். சட்டத்துக்குக் புறம்பான சக்திகள் இயங்குகின்றன என்பதையே அது வெளிக்காட்டும்.

அவ்வாறு சட்டத்துக்குக் புறம்பாக செயல்படுகின்ற குழுக்களையும் நபர்களையும் அடையாளம்கண்டு கைது செய்வது அல்லது வேறுவகையில் அவர்களை அகற்றுவது அரசாங்கத்தின் கடமை.

அந்தக் கடப்பாட்டில் இலங்கையில் ஆட்சியிலிருந்த அரசாங்கங்கள் எதுவும் உண்மையான நோக்கில் செயற்பட்டு இருக்கவில்லை.

இலங்கையில் ஆட்சியில் இருந்த அரசாங்கங்களுக்கு, அரசியல்வாதிகளுக்கு, பாதாள உலகக் குழுக்களைச் சேர்ந்தோர் பக்கபலமாக இருந்திருக்கின்றனர், பாதுகாப்பு வழங்கியிருக்கின்றனர். இது இப்போதல்ல, பல தசாப்தங்களுக்கு முன்னர் இருந்தே இருந்து வந்த நிலைமை.

முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் வலது கையாக இருந்த சிறிசேன குரே. இப்போது அவர் மரணமடைந்து விட்டார்.

அவர் கொழும்பில் பாதாள உலகக் குழுவை வைத்திருந்தவர். கொழும்பை ஆட்டிப்படைத்த அவர், பிரேமதாசவினால் அரசியலுக்குக் கொண்டுவரப்பட்டு, கொழும்பு மாநகர மேயராக மாத்திரமன்றி, அமைச்சராகவும்கூட இருந்திருக்கிறார்.

இதுபோல பலர் இருக்கின்றனர். சண்டித்தனம் செய்யும் அரசியல்வாதிகளும் இருக்கின்றனர்.

வெலிக்கடைச் சிறைச்சாலையில் தண்டனையை அனுபவித்து வருகின்ற முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா, நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திரவைச் சுட்டுப் படுகொலைசெய்தவர். பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திரவும்கூட ஒரு தாதாவாகவே இருந்தவர்.

இப்படிப் பல பேர், இலங்கை அரசியலில் இருந்தனர். இப்போதும் இருக்கின்றனர்.

நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில், நாடாளுமன்றத்துக்குள் நடந்த மோதல்களின்போது, பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் எப்படி சண்டித்தனம் செய்தனர் என்பதே அவர்களின் பின்னணியை வெளிப்படுத்தப் போதுமானதாக இருந்தது.

போதைப்பொருள் வர்த்தகம், அரசியல் தொடர்புகள், அதிகார கட்டமைப்புக்குள் ஊடுருவல் போன்றவற்றின்மூலம் பாதாள உலகக் குழுக்கள் இன்று இலங்கையை அச்சுறுத்திக் கொண்டிருக்கின்றன.

பாதாள உலகக் குழுக்களின் தலைவர்கள் பலர், டுபாய் போன்ற நாடுகளிலிருந்து இயங்குகின்றனர். அங்கிருந்து கட்டளையிட்டு கொலைகளை நிகழ்த்துகின்றனர். குற்றச்செயல்களில் ஈடுபடுகின்றனர்.

நீதிமன்றத்துக்குள் வைத்து கணேமுல்ல சஞ்சீவவை, கொல்வதற்குக்கூட டுபாயில் இருந்து கொமாண்டோ சலிந்த என்பவரால் ஒன்றரை கோடி ரூபாய் பேரம் பேசப்பட்டிருக்கிறது.

அதுமாத்திரமன்றி சிறைச்சாலைகளும்கூட பாதாள உலக கும்பல்களின் உறைவிடமாக மாறி இருக்கிறது.

கைது செய்யப்பட்டு, உள்ளே பாதுகாப்பாக இருந்துகொண்டே அவர்கள் குற்றச்செயல்களை அரங்கேற்றுகின்றனர்.

மொத்தத்தில் இலங்கையின் பொதுப்பாதுகாப்பை இந்தப் பாதாள உலகக்குழுக்கள் அச்சுறுத்திக் கொண்டிருக்கின்றன.

இந்த அச்சுறுத்தலை முற்றுமுழுதாகக் களைய முடியாமல் இருப்பதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன.

ஒன்று அரசியலுடன் அவர்கள் கொண்டிருக்கின்ற தொடர்பு. இன்னொன்று பாதுகாப்புக் கட்டமைப்புடன் அவர்கள் வைத்திருக்கின்ற உறவு.

தொடர்ச்சி 07ஆம் பக்கம்

விளம்பரம்
VLAMBARAM™
35ஆவது ஆண்டில்
பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப் பொறுப்பாளர்: விஜய் செல்லையா
அலுவலகப் பொறுப்பாளர்: சுதர்சினி D.

'விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங்' நிறுவனத்தால் வெளியிடப்படும் 'விளம்பரம்' பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும், விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். விளம்பரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஆசிரியரின் அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

Vlambaram Publications Inc.
GTA Square, 5215 Finch Ave.E.,
#201, Toronto, ON M1S 0C2, Canada
TEL- 416-282-8059
email:vlambaram@sympatico.ca
web: www.vlambaram.com
Vlambaram Publications Inc. 2020 All Rights Reserved

Vlambaram - March 01, 2025.qxp_Vlambaram-Front 2025-02-28 7:11 PM Page 5



# கனடிய லிபரல்.....

01ஆம் பக்கத்தொடர்ச்சி

தொகுதிகளிலும்) பரந்த ஆதரவு இருக்க வேண்டும் என்பதை இத்தேர்தல் முறை வலியுறுத்துகிறது.

இம்முறை லிபரல் கட்சியின் தலைவர் பதவிக்கான தேர்தலில் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட பலர் போட்டியிடுவதைத் தவிர்த்திருந்தனர். போக்குவரத்து மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சரான அனிதா ஆனந்த், புதுமை, விஞ்ஞானம் மற்றும் தொழிற்துறை அமைச்சரான பிரன்சுவா-பிலிப் ஷாம்பெயின், நிதி அமைச்சரும் மற்றும் அரசுகளுக்கிடையேயான விவகார அமைச்சருமான டொமினிக் லெப்லாங்க் மற்றும் குடிவரவு, அகதிகள் மற்றும் குடியுரிமை அமைச்சராக இருந்த சோன் சைமன் அன்றா ஆகியோர் கட்சித் தலைமைப் பதவிக்குப் போட்டியிடுவதைத் தவிர்த்திருந்தனர்.




Liberal MP Frank Baylis Thanks: Adrian Wyld/CP

கனடியப் பிரதமர் ஜஸ்ரின் ரூடோ தனது பதவி விலகலை அறிவித்த உடனேயே மொன்றியலிலுள்ள Pierrefonds Dollard தொகுதியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான மின்னியல் பொறியியலாளரும், தொழிலதிபரும், கறுப்பின வம்சாவளியைச் சேர்ந்த Frank Bayils லிபரல் கட்சியின் தலைமைப் பதவிக்குத் தான் போட்டியிடுவதாகத் தெரிவித்து, பின்னர் அதற்குரிய பத்திரங்கள் மற்றும் பதிவுக் கட்டணங்களைச் செலுத்தியிருந்தார்.

அடுத்து ஒட்டாவாவில் உள்ள Nepean தொகுதி நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கும் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த முதுமானி கலைப்பட்டதாரியான Chandrakanth Arya லிபரல் கட்சியின் தலைமைப் பதவிக்குப் போட்டியிடுவதாகத் தெரிவித்து அதற்குரிய பத்திரங்களைச் சமர்ப்பித்திருந்தார். ஆனால் லிபரல் கட்சி அவரது வேட்பு மனுவை ஏற்றுக் கொள்ளாமல் ஜனவரி 26ஆம் திகதி நிராகரித்திருந்தது.

நோவாஸ்கோஷியா மாகாணத்தில் சிட்னி-விக்ரோறியா தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினரான லிபரல் கட்சியைச் சேர்ந்த கனடிய முதற்குடிமக்களின் சமூகத்தை சேர்ந்த Jaime Y Battiste லிபரல் கட்சியின் தலைமைப் பதவிக்குப் போட்டியிடுவதாகத் தெரிவித்து அதற்குரிய பத்திரங்களை சமர்ப்பித்திருந்தார். ஆனால் அவரால் $350,000 பதிவுக் கட்டணத்தை செலுத்த இயலாமல் ஜனவரி 30ஆம் திகதி தானாகவே போட்டியில் இருந்து விலகினார்.



Former Bank of Canada governor Mark Carney Thanks: Darryl Dyck/Canadian Press

கனடாவின் வடமேற்குப் பிரதேசத்தில் பிறந்தவரும் Harvard மற்றும் Oxford பல்கலைக்கழகங்களின் பட்டதாரியும், பொருளாதாரத்துறையில் முனைவர் பட்டம் பெற்றவருமான Mark Carney லிபரல் கட்சியின் தலைமைப் பதவிக்குப் போட்டியிடுவதாகத் தெரிவித்து அதற்குரிய பத்திரங்களையும் மற்றும் பதிவுக் கட்டணத்தையும் செலுத்தினார். இவர் கனடிய வங்கியின் ஆளுநராகவும் இங்கிலாந்து வங்கியின் ஆளுநராகவும் பதவி வகித்தவர். இவர் கனடிய நாடாளுமன்றத்தில் இதுவரை உறுப்பினராகப் பதவி வகிக்கவில்லை.



Liberal MP Chrystia Freeland

ஜஸ்ரின் ரூடோவின் அமைச்சரவையில் துணைப்பிரதமராகவும், நிதி அமைச்சராகவும் இருந்த அல்பேட்டா மாகாணத்தில் பிறந்தவரான Chrystia Freeland லிபரல் கட்சியின் தலைமைப் பதவிக்கு போட்டியிடுவதாகத் தெரிவித்து அதற்குரிய பத்திரங்களையும் மற்றும் பதிவுக் கட்டணத்தையும் செலுத்தினார். இவர் Harvard மற்றும் Oxford பல்கலைக்கழகங்களின் பட்டதாரியும் ஊடகத்துறையில் பணியாற்றியவரும் ஆவார். உக்ரைன் வம்சாவளியைச் சேர்ந்த இவர் தற்போது ரொறன்ரோவில் உள்ள University - Rosedale தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கிறார்.



Karina Gould Thanks: International Conference on FP

கனடிய மத்திய அரசின் அரசவைத் தலைவரும் ஒன்ராறியோ மாகாணத்தில் Burlington தொகுதி உறுப்பினருமான Karina Gould லிபரல் கட்சியின் தலைமைப் பதவிக்குப் போட்டியிடுவதாகத் தெரிவித்து அதற்குரிய பத்திரங்களையும் மற்றும் பதிவுக் கட்டணத்தையும் செலுத்தினார். யூத இனத்தவரான இவர் McGill மற்றும் Oxford பல்கலைக்கழகங்களின் பட்டதாரியாவார்.




Mark Carney, Chrystia Freeland, Karina Gould and Frank Baylis Thanks:CBC

ஒன்ராறியோ மாகாணத்தில் உள்ள Brampton-Springdale தொகுதியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த தொழில் அதிபரான Ruby Dhalla லிபரல் கட்சியின் தலைமைப் பதவிக்குப் போட்டியிடுவதாகத் தெரிவித்து அதற்குரிய பத்திரங்களையும் மற்றும் பதிவுக் கட்டணத்தையும் செலுத்தினார். வினிப்பெக் மாகாணத்தில் மனிற்ரோபா நகரில் பிறந்த சீக்கிய இனத்தவரான இவர் Winipeg பல்கலைக்கழகம் மற்றும் Canadian Memorial Chiropractic College ஆகியவற்றின் பட்டதாரியாவார். இவரது வேட்பு மனுவை கனடாவின் தேர்தல் சட்டத்தை மீறியதற்காகவும் தவறான நிதி அறிக்கையைச் சமர்ப்பித்ததற்காகவும் லிபரல் கட்சி பெப்பிரவரி 21ஆம் திகதி நிராகரித்திருந்தது. 100,000இற்கு மேற்பட்ட லிபரல் கட்சி உறுப்பினர்களைச் சேர்த்த தன்னை கட்சித் தலைவருக்கான வேட்பாளராக போட்டியிடுவதிலிருந்து நிராகரித்தது தவறு என இவர் வாதிட்டாலும், இவரது மேன்முறையீட்டையும் கட்சி நிராகரித்து, இவரை வேட்பாளர் பட்டியலில் இருந்து நீக்கியது.

இறுதியாக Frank Baylis, Mark Carney, Chrystia Freeland மற்றும் Karina Gould ஆகிய நான்கு பேருமே லிபரல் கட்சியின் தலைவர் பதவிக்கு வேட்பாளர்களாகப் போட்டியிட கட்சி அனுமதித்தது. இவர்கள் நான்கு பேருமே லிபரல் கட்சியின் தலைவர் தெரிவிற்கான விவாதத்தில் பெப்பிரவரி 24 மற்றும் 25ஆம் திகதிகளில் பங்கேற்றனர்.

லிபரல் கட்சி உறுப்பினர்கள் தங்களது தலைவர் தெரிவிற்கான வாக்களிப்பை பெப்பிரவரி 26ஆம் திகதி காலை 8 மணியில் இருந்து செய்யலாம். இந்த வாக்களிப்பு மார்ச் 9ஆம் திகதி மாலை 3 மணிக்கு நிறைவு பெறும். அன்று மாலை ஒட்டாவாவில் லிபரல் கட்சியின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டவரின் பெயர் அறிவிக்கப்படும்.

தற்போதைய லிபரல் கட்சியின் 153 நாடாளுமன்ற உறுப்பினர்களில் பல அமைச்சர்கள் உட்பட 83 உறுப்பினர்கள் Mark Carneyஇற்கு தமது ஆதரவைத் தெரிவித்துள்ளனர். சில அமைச்சர்கள் உட்பட 26 உறுப்பினர்கள் Chrystia Freelandஇற்குத் தமது ஆதரவைத் தெரிவித்துள்ளனர்.

லிபரல் கட்சியின் தலைவருக்கான விவாதங்கள் நடைபெறுமுன்னர் Mainstreet Research நிறுவனம் நடத்திய கருத்துக் கணிப்பில் Mark Carney முன்னிலையில் நின்றாலும் அவரால் வாக்கெடுப்பின் முதலாவது எண்ணிக்கையில் 50%இற்கு மேற்பட்ட வாக்குகளைப் பெறஇயலாது என்றும் இரண்டாவது எண்ணிக்கையில் அவரே 50%இற்கு அதிகமான வாக்குகளைப் பெற்று லிபரல் கட்சியின் தலைவராகத் தெரிவாகுவார் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. அக் கருத்துக் கணிப்பின்படி வாக்கெடுப்பின் முதலாவது எண்ணிக்கையில் Mark Carney 43%. Chriystia Freeland 31%, Karina Gould 16%, Frank Bayils 7% வாக்குகளைப் பெறுவர் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

பெரும்பாலான ஊடகவியலாளர்களின் கருத்துகளின்படி இரண்டு விவாதங்களிலும் Karina Gould மிகவும் சிறப்பாகச் செய்துள்ளார். மற்றும் Mark Carney இனுடைய பிரஞ்ச் விவாதம் அவருக்குப் பின்னடைவைக் கொடுத்துள்ளது. இதனால் தற்போது Karina Gould கருத்துக்கணிப்பில் இரண்டாம் இடத்திற்கு வந்துள்ளார்.



Karina Gould, Frank Baylis, Chrystia Freeland and Mark Carney Thanks: The Canadian Press / Christinne Muschi

எவ்வாறாயினும் வாக்கெடுப்பின் இரண்டாவது எண்ணிக்கையில் Mark Carney வெல்வது மிகவும் சாத்தியமாக உள்ளது எனப் பெரும்பாலான ஊடகங்கள் எதிர்வு கூறுகின்றன.




சந்திரமௌலீஸ்வர சிவாலயம்

தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்

வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்: காலை 7am - மாலை 9pm
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm

விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்

Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480

3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

Vlambaram - March 01, 2025.qxp_Vlambaram-Front 2025-02-28 7:11 PM Page 6



# பிராம்ப்டன் நகரின் 2025ஆம் ஆண்டிற்கான கொல்லைப்புறத் தோட்டம் அமைக்கும் திட்டத்தில் இப்போது பதிவுசெய்து கொள்ளத் தொடங்கலாம்

*புதிதாக சீரமைக்கப்பட்ட இந்தத்திட்டம், வலுவான திறன்களை உருவாக்க, அதிகமான குடியிருப்பாளர்களை அனுபவம் வாய்ந்த தோட்டம் அமைப்பவர்களுடன் இணைக்கிறது.*

பிராம்ப்டன், ON (பெப்ரவரி 06, 2025) - பிராம்ப்டன் நகரின் 2025ஆம் ஆண்டிற்கான கொல்லைப்புறத் தோட்டம் அமைக்கும் திட்டத்திற்கு இப்போது பதிவு செய்தல் தொடங்கியுள்ளது.

இந்த முன்னெடுப்பானது, குடியிருப்பாளர்கள் தங்கள் சொந்த விளைபொருட்களை வளர்த்து, சமூகத்திற்கு அர்த்தமுள்ள வகையில் திருப்பித்தர அதிகாரம் அளிக்கிறது. தோட்டக்கலைத் திறன்களை வலுப்படுத்தவும், தோட்டக்கலையின் பல நன்மைகளைப்பற்றி அறியவும் குடியிருப்பாளர்களுக்கு மேம்பட்ட வாய்ப்புகளை வழங்குவதற்காக இத்திட்டம் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

கொல்லைப்புற தோட்டம் அமைக்கும் திட்டத்திற்கான ஆதார வளங்களைப் பயன்படுத்தி ஒரு பங்கேற்பாளர் காய்கறித் தோட்டத்தை வளர்க்கும் புகைப்படம்.
படம் உதவி: பிராம்ப்டன் நகர நிர்வாகம்

பங்கேற்கும் குடியிருப்பாளர்கள் பிராம்ப்டன் தோட்டக்கலை சங்கத்தைச் சேர்ந்த அனுபவம் வாய்ந்த தோட்டக்காரர்கள் தலைமையிலான நேருக்கு நேர் நடைபெறும் பயிற்சிப் பட்டறையில் கலந்து கொள்ள வேண்டும் என்பதே இந்த ஆண்டின் புதிய அம்சமாகும். இந்த பரஸ்பர செயல்புரியக் கூடிய அமர்வுகள் கொல்லைப்புற தோட்டம் அமைப்பதில் நடவு செய்தல், பராமரித்தல் மற்றும் அறுவடை செய்தல் பற்றிய மதிப்புமிக்க அறிவுறுத்தல்களை வழங்கும்.
நேருக்கு நேர் பயிற்சிப் பட்டறைகள் மார்ச்



BRAMPTON
The Corporation of The City of Brampton
2 Wellington Street West, Brampton, ON L6Y 4R2 311 TTY: 905.874.2130

மாதம் முழுவதும் நடைபெறும், வளரும் பருவத்திற்கு ஏற்ற நேரத்தில் பங்கேற்பாளர்கள் தங்கள் தோட்டக்கலைப் பயணத்தைத் தொடங்குவதற்கான திறன்களையும் நம்பிக்கையையும் பெற்றிருப்பதை உறுதி செய்யும்.

### பங்கேற்பது எப்படி

2025 கொல்லைப்புற தோட்டம் அமைக்கும் திட்டத்தில் பங்கேற்க, குடியிருப்பாளர்கள் ஒரு நேருக்கு நேர் பயிற்சிப் பட்டறையில் பதிவுசெய்து கலந்து கொள்ளவேண்டும். சமுதாயக்கூட அறை எண் 2இல் உள்ள செஞ்சுரி கார்டன்ஸ் பொழுதுபோக்கு மையத்தின் இரண்டாவது மாடியில் நடைபெறும் இந்தப் பயிற்சிப் பட்டறைகளை மார்ச் 1, 8, 15 மற்றும் 22ஆகிய திகதி களில் சனிக்கிழமை காலை 9:00மணி முதல் 11:00 மணிவரை நடத்த திட்டமிடப்பட்டுள்ளன.

மார்ச் மாத இறுதியில் தோட்டம் அமைப்பதற்கான பொருட்களைப் பெற நேரில் வருகை தருவது கட்டாயமாகும். பயிற்சிப் பட்டறைகளில் கலந்துகொள்வது குறித்த கேள்விகள் இருப்பின் ஆர்வமுள்ள பங்கேற்பாளர்கள் இங்கு தொடர்பு கொள்ளலாம், bramptongreencity@brampton.ca மேலும் அறிந்து கொள்வதற்கும் பதிவு செய்வதற்கும் இங்கு வருகை தரவும்: brampton.ca/backyardgarden.

### கொல்லைப்புறத் தோட்டம் அமைக்கும் திட்டம் பற்றி

ஸ்கொட்ஸ் கனடா (Scotts Canada), ஃபீல்கேட் டெவலப்மென்ட்ஸ்(Fieldgate Developments) மட்டாமி ஹோம்ஸ் (Mattamy Homes) மற்றும் பாரடைஸ் டெவலப்வைன்ட்ஸ் (Paradise Developments) ஆகிய நிறுவன அமைப்புகளால் தாராள நிதியுதவி செய்யப்படும்.

கொல்லைப்புறத் தோட்டம் அமைக்கும் திட்டம், குடியிருப்பாளர்கள் தங்கள் சொந்தப் பழங்கள் மற்றும் காய்கறிகளை வளர்க்க உதவுவதற்கும், அவர்களின் நல்வாழ்வை மேம்படுத்துவதற்கும் உணவுப் பாதுகாப்பின்மைக்கு எதிரான சமூகத்தின் போராட்டத்திற்குப் பங்களிப்பதற்கும் என வடிவமைக்கப்பட்டுள்ளது.

பங்கேற்பாளர்கள் தங்களிடம் மீதமாகும் உபரி விளைபொருட்களை உள்ளூர் உணவு வங்கிகள் மற்றும் சமூக அமைப்புகளுக்கு நன்கொடையாக வழங்க ஊக்குவிக்கப்படுகின்றனர். தேவைப்படுவோருக்கும் வழங்க, வேண்டப்படுகின்றனர். ஒரு நிகழ்ச்சியில் பங்கேற்பாளராக இருக்கும் தனிநபர்களுக்கு ஐந்து பை நிறைய மண் மற்றும் எளிதில் வளரக் கூடிய மூன்று விதை வகைகள் (கீரை, பீன்ஸ் மற்றும் கேரட்) அடங்கிய தோட்டக் கலை மாதிரி விதைப் பொதியைப் பெறுவார்கள்).

### கொல்லைப்புறத் தோட்டக் கிளப் மற்றும் இ-செய்திக் கடிதத்திற்கு பதிவு செய்யுங்கள்

கொல்லைப்புறத் தோட்டக் கிளப் ஆனது, அனைத்து தோட்டக்கலை ஆர்வலர்களுக்கும், தோட்டக்கலை தகவல்கள், தோட்டக் கலை நிபுணர்களின் ஆலோசனைகள், பிரத்யேக சலுகைகள் மற்றும் பிற ஆதாரவளங்களுடன் மாதாந்திர மின்-செய்தி மடலை வழங்குகிறது.

இந்தக் கிளப்-இல் சேர்ந்து இ-செய்திமடலைப் பெற இங்கு வருகை தரவும். brampton.ca/backyardgarden

### அறிஞர் கூற்றுக்கள்

"2025ஆம் ஆண்டின் பயிர் வளரும் பருவத்தில், கொல்லைப்புறத் தோட்டம்

தொடர்ச்சி 20ஆம் பக்கம்

# கறுப்பின



குரு அரவிந்தன்

2025 தை மாதம் முழுவதும் கனடாவில் தமிழ் மரபுத் திங்கள் கொண்டாடப்பட்டது. பல்லின மக்களும் தமிழரின் வரலாற்றை அறிந்துகொள்ள இது உதவியாக இருந்தது. அதைத் தொடர்ந்து பெப்ரவரி மாதம் பல்கலாசார நாடான கனடா முழுவதும் உள்ள மக்கள் கறுப்பின வரலாறு, அவர்களின் சமூகங்களின் பாரம்பரியம் மற்றும் அவர்களின் நாட்டிற்கான பங்களிப்புகளை மதிக்கும் கொண்டாட்டங்களில் பங்கேற்கின்றனர். ஓர் இனத்தின் வரலாறு ஆவணப்படுத்தப்படவில்லை என்றால், அந்த இனத்தின் மதிப்புமிக்க பாரம்பரியம் இல்லாமல் போய்விடும். அது இன்றைய உலகின் சிந்தனையில் ஒரு புறக்கணிக்கக்கூடிய காரணியாக மாறி, மெல்ல அழிந்துபோய் விடக்கூடும்.


முதலில் அமெரிக்காவில்தான் 1926ஆம் ஆண்டு கறுப்பின மாதமாக அறிவிக்கப்பட்டது. கனடாவில் பெப்ரவரி மாதத்தை 'பிளாக் ஹிஸ்டரி' மாதமாக ஒருமனதாக ஒப்புதல் பெற்று, மார்ச் மாதம் 4ஆம் திகதி 2008ஆம் ஆண்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது. இப்பிரேரணை ஏற்றுக் கொள்ளப்பட்டதன்மூலம் கறுப்பின வரலாற்று மாதமாக ஆண்டுதோறும் அனுசரிக்கப்படும் நினைவு மாதமாக இருக்கின்றது. அமெரிக்காவிலும், கனடாவிலும் பெப்ரவரி மாதத்திலும், ஐக்கிய இராச்சியம், அயர்லாந்து ஆகிய நாடுகளில் ஒக்ரோபர் மாதத்திலும் அனுசரிக்கப்படுகின்றது. வேறு சில நாடுகளும் வெவ்வேறு மாதங்களில் இதைக் கொண்டாடுகின்றன.




அமெரிக்காவின் தலைநகரான வோசிங்டனில் ஆபிரிக்க அமெரிக்க வரலாறு மற்றும் கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் தேசிய அருங்காட்சியகம் ஒன்று இருக்கின்றது. மேற்கு ஆபிரிக்க யோறுபன் (Yoruban) கலையின் மூன்றடுக்கு கிரீடங்களைப்போல இக்காட்சியகம் வடிவமைக்கப்பட்டுள்ளது. 2003ஆம் ஆண்டு நிறுவப்பட்ட இந்தக் காட்சியகத்தை 2016ஆம் ஆண்டு அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா உத்தியோகபூர்வமாகத் திறந்து வைத்தார். இங்கு சென்றபோது, நான் அறிந்திராத கறுப்பின மக்களைப் பற்றிய பல வரலாற்று உண்மைகளை அறிந்து கொள்ள முடிந்தது.

1619ஆம் ஆண்டுதான் முதன் முதலாக 'வைட்லயன்' என்ற கப்பலில் அடிமைகள் அமெரிக்காவில் உள்ள வேர்ஜீனியாவுக்குக் கொண்டு வரப்பட்டனர். இதைத் தொடர்ந்து ஆபிரிக்காவின் பல பகுதிகளில் இருந்தும், 45இற்கும் மேற்பட்ட கறுப்பு இனக்குழுக்களில் இருந்து பல கறுப்பினத்தவர் அமெரிக்காவிற்கு அடிமைகளாகக் கொண்டு வரப்பட்டனர். அமெரிக்க அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தின்படி, 1863ஆம் ஆண்டில், ஜனாதிபதி லிங்கன் அடிமைகளின் விடுதலைப் பிரகடனத்தை வெளியிட்டார். சுமார் 250 ஆண்டு காலமாக அமெரிக்காவில் நடைமுறையில் இருந்த அடிமைமுறை சட்டப்படி முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது.

கறுப்பின மக்களுக்கு விடுதலை கிடைத்ததால், கலாநிதி மக் ஜேமிசன் (Dr. Mae Jemison) என்ற பெண்மணி 1992ஆம் ஆண்டு விண்வெளிக்குச் சென்ற முதலாவது ஆபிரிக்க அமெரிக்கன் என்ற சாதனையைப் படைத்திருந்தார். இவரைப் போலவே, மாட்டின் லூதர்கிங், நெல்சன் மண்டெலா, பராக் ஒபாமா, டெஸ்மண்ட் டுட்டு, முகமட் அலி, மால்கம் எக்ஸ், பீலே, மைக்கல் ஜோடன், மைக்கல்




ஜாக்சன், யுசெயின் போல்ட், செரீனா வில்லியம்ஸ் போன்ற சாதனையாளர்கள் சிலரை இங்கே சுட்டிக் காட்டலாம். இவர்களைப் போலவே கறுப்பின மக்கள் பலர் உயர் பதவிகளை இன்று வகிக்கின்றனர். அதுமட்டுமல்ல, அவர்களுக்குக் கிடைத்த சுதந்திரத்தைத் தான் புலம் பெயர்ந்த தமிழ் மக்களான நாங்களும் இன்று அனுபவிக்கக் கூடியதாக இருக்கின்றது.

# நாமும் நமது இல்லமும் 672

# ஆதன நிர்மாணத்தில் புதிய ஏற்பாடு

# TRL - MIX DEVELOPMENT



ராஜா மகேந்திரன்
raja@mahendran.ca
416.315.9397/416.321.6969

நிர்மாணக் கொள்கையில் புதிதான எண்ணக்கரு இப்பொழுது வன்கூவர் (British Columbia)இல் கொண்டுவரப்பட்டுள்ளது. கனடிய ஆதன வியாபாரத்தில் வன்கூவர் நகரமே முன்னோடி. அதற்குப் பிறகே ரொறொன்ரோவில் இந்தக் கருத்துகள் நடைமுறைப்படுத்தப்படும்.

ஒரு சமூகம் (Community) உருவாக்கும் போது ஆதனம் (மக்கள் வாழும் பகுதியில்) அடுக்குமனை (Condominium) கட்டிடத் தொகுதிகள், வீடுகள் (Low Rise), அலுவலக அடுக்குமாடிக் கட்டிடங்கள் மற்றும் தொழில் உருவாக்கம் செய்யும் கட்டிடங்கள் (Industrial Buildings) போன்றவற்றை ஒன்றாக ஒரே இடத்தில் உருவாக்குதல் என்பதே இந்தப் புதிய கருத்துருவாக்கம்.

உதாரணமாக எட்டு (8) அடுக்குமாடி அலுவலகக் கட்டிடம், உயரம் குறைந்த அடுக்குமாடி மனைகள், வாடகைக்குக் கொடுப்பதற்கான வாடகை மனைகள், மேலும் ஒரு கட்டிடத்தில் சிறிய வியாபாரத் தலங்கள் (Restaurant உட்பட) மற்றும் சிறிய தொழில்கள் உருவாக்கக் கூடிய சில கட்டிடங்கள் ஒன்றாக அமைத்தல்.

இவ்வாறான சமூகம் உருவாக்குவதால் வாழும் இடமும், தொழில்புரியும் இடமும் ஒரே பகுதியில் இருப்பதால் மக்களின் பிரயாணத்திற்கான நேர காலம் கட்டுப்படுத்தப்படுகின்றது.

இவ்வாறான அமைப்புகளால் பல நன்மைகள் உதாரணமாக தெருக்களின் நெருக்கடிகள் குறைக்கப்படும். வாகனங்களால் உமிழப்படும் கரியமில வாயு (Carbon dioxide) தவிர்க்கப்படும்.



கனடியர் கூடியளவு நேரத்தை குடும்பத்துடன் செலவழிக்கக் கூடியதாக இருக்கும். ஒரு குடும்பத்திற்குரிய வாகனத்தின் எண்ணிக்கையைக் குறைக்கலாம். மேலும் பல நன்மைகள் இருக்கின்றன.

பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் இவ்வாறான கட்டிட அமைப்பு முறைகளை பெரிதாக ஆதரித்துள்ளனர். மாகாண, உள்ளூராட்சி அரசுகள் இதற்கேற்ப தமது நிர்மாணக் கொள்கைகளை மாற்றம் செய்ய வேண்டியுள்ளது. பழைய முறையிலே சிந்திக்கும் அரசியல்வாதிகள் இவ்வாறான கொள்கை மாற்றங்களை எவ்வாறு ஏற்றுக் கொள்வார்கள் என்பது எப்போதும் கேள்வியே? எனினும், வன்கூவர் நகரம் எதற்கும் முன்னோடி என்பதால், மாற்றங்கள் ஏற்படலாம்.

கோவிட்-19 பெருந்தொற்றுக்குப் பின்னால் பல மாற்றங்கள் ஜெனரேசன் Y (Generation Y) (1981-1996இல் பிறந்தவர்கள்) மற்றும் ஜெனரேசன் (Generation) (1997-2012இல் பிறந்தவர்கள்) போன்றவர்களின் ஆதனம் வாங்கும் எண்ணம் ஏற்கனவே கனவாகி வரும் காலத்தில், இவ்வாறான புதிய எண்ணக்கருக்கள் ஆதனம் வாங்குவதற்கான சிறப்பான கொள்கை மாற்றமாக எண்ணப்படுகின்றது. அத்துடன் ஒன்ராறியோ அரசினால் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டுள்ள Garden Suite (ஏற்கனவே உள்ள வீட்டில், மேலும் ஒரு வாழ்வு இடம் அமைத்தல் மற்றும் நிலப்பகுதியில் நான்கு இருப்பிடங்கள் (4 Plex) அமைத்தல் இலகுவாக்கப்பட்டுள்ளன.

இவ்வாறான அமைப்புகள் ஏற்கனவே பல நாடுகளில், பல வருடங்களிற்கு முன்பாகவே நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. மக்கள் வாழ்வு இடங்களின் நெருக்கடிகள் ஓரளவு தவிர்க்கப்படலாம்.

கனடா போன்ற மேற்குலக நாடுகள் இவ்வாறான புதிய ஏற்பாட்டில் பின் தங்கியே உள்ளன. கனடிய மக்கள் அதிகரிப்பிற்கு ஏற்ப ஆதனங்கள் அமைக்கப் படவில்லை என்பது குறையாகவே காணப்படுகின்றது.

1 Bedroom + Den & 1.5 washroom Brand new town house for rent. Good for Couple. Close to access the bus, School & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.844.1447**

## ROOM FOR RENT
**NEILSON & SHEPPARD**
2 Bedrooms for rent in a house. 1 Private room & 1 Sharing room. 1 Min. walk to bus stop. 2 Min. walk toM alvern Mall & all facilities. Avail immediately.
தொடர்புகளுக்கு: **647.278.2440**

## BASEMENT/ROOM FOR RENT
**MORNINGSIDE & STAINES**
3 Bedrooms +Den walkout bsmt for rent. 2 full washroom. 1 Room for rent in main floor. Close to bus stop & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.888.9437**

## BASEMENT/ROOM FOR RENT
**MCCOWAN & LAWRENCE**
4 Bedrooms & 2 full washrooms bsmt/ Rooms for rent. Sep en trace & 1 Parking. Close to STC & Subway. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.876.3400**

## HOUSE FOR RENT
**MARKHAM & FINCH**
3 Bedrooms & 1.5 washroom house for rent. 1 Parking. 1 Min walk to bus stop & Close to all facilties. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.864.1051**

## ROOM FOR RENT
**MONINGSIDE &OLDFINCH**
2 Bedrooms for rent in a 3 bedrooms walkout bsmt. Close to TTC & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.327.3936**

## ROOM FOR RENT
**SCAR.GOLF CLUB & LAWRENCE**
Room for rent. Parking available. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.454.9986**

## ROOM FOR RENT
**TAPSCOTT & FINCH**
2 Bedrooms in Upstairs. Shared washroom & kitchen. Male only. Close to TTC, Centennial College & grocery shopping. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.837.1860**

## ROOM FOR RENT
**MIDDLEFIELD & FINCH**
1 Bedroom for rent in a bsmt. Sep. entrance. Close to TTC. Working /student Male preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.707.6095**

## ROOM FOR RENT
**MCCOWAN & DENISON**
1 Bedroom for rent.
All inclusive.
Avail. immediately.
**416.522.3314/437.219.3329**

## BASEMENT/ROOM FOR RENT
**WHITES RD & TAUNTON**
**1085 Foxtail Cres. Pickering**
1.5 Bedrooms bsmt for rent. Sep. entrance. 2 Bedrooms for rent in upstairs, Parking. Close to bus stop. Avail. March 01, 2025.
தொடர்புகளுக்கு: **416.786.5816**

## HOUSE / BASEMENT FOR RENT
**MARKHAM & 16TH AVENUE**
4 Bedrooms house for rent. 2+1 washrooms. 2 bedroomss bsmt for rent. 3 car parking. Close to South Asiyan, Go station, No Frills & food Basics. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.405.1962**

## HOUSE/BASEMENT FOR RENT
**MARKHAM & STEELES**
3+1 Bedrooms house for rent. 2 Bedrooms bsmt for rent. Close to TTC Rute, Schools, UFT, Major Shops & HWY facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.237.2052**

## ROOM FOR RENT
**MARKHAM & SHEPPARD**
1Room for rent. Rent $500 +utility.
**MARKHAM & DENISON**
1 Very large bedroom Rent $1,400. 2 Male preferred. Rooms available $500 & $600. No alcohol, no pets & no smoking. Avail.immediately.
**647.507.2148/647.864.1051**

## HOUSE/BASEMENT FOR RENT
**MORNINGSIDE & STAINES**
3 Bedrooms house & 2 Bed rooms bsmt for rent. Close to bus stop, shopping mall & all facilities. Avail. immediately.
**647.971.6193/416.300.9817**

## HOUSE FOR RENT
**MARKHAM & STEELES**
3 Bedrooms & 2 Full Washrooms house for rent. 1 Parking & Sep Laundry. No Pets. Close to all facilities. Available immediately.
**416.731.8542 / 647.780.8542**

## HOUSE FOR RENT

**WARDEN & HWY 401**

3 Bedrooms & 1 washroom house for rent. 2 Parking.1Min. walk to bus stop. Close to all facilities. Avail. March 01, 2025

**416.414.0439/647.740.8181**

## CONDO. FOR RENT

**BRIMLEY & ELLESMERE**

2 Bedrooms & 2 full washrooms condo. for rent. 1 parking. Close to Scar. town centre & all facili ties. Avail. immediately.

**613.769.3432/416.454.6940**

## HOUSE/BASEMENT FOR RENT

**9TH LINE & 14TH AVENUE**

4 Bedrooms & 3 washrooms house for rent.

2 Bedrooms & 2 washrooms bsmt for rent.

**416.918.9848/416.857.7603**

## முதியோர் பராமரிப்பு

**SCARBOROUGH** பகுதியில் வயதான பெண் ஒருவருக்கு உணவு சமைத்து அவரைப் பராமரிப்பதற்கு **(2-3 Hours)** பெண் ஒருவர் தேவை.

தொடர்புகளுக்கு: **647.947.1959**

## HOUSE FOR RENT

**HWY 401 & PORT UNION**

3 Bedrooms bungalow house for rent. 1 Parking. 10Min. walk to all facilities. Rent-2,600+90% Utility.Avail. immediately.

Vivek - **416.418.0477**

## HOUSE FOR RENT

**MORNINGSIDE & GUILDWOOD**

3+1 Bedrooms entire house for rent. 7 Parking. Close to TTC, GO Train & all facilities. Walking distance to Ontario Lake. Avail. immediately.

தொடர்புகளுக்கு:**416.930.9119**

## HOUSE/BASEMENT FOR RENT

**BAYLY & HARWOOD**

3 Bedrooms house &1 Bedroom walkout bsmt for rent. Close to Ajax Pickering hospital. Avail. immediately.

தொடர்புகளுக்கு: **416.556.4881**

## OFFICE SPACE FOR RENT

**BRAMPTON (MAIN & QUEEN)**

**MARKHAM & FINCH**

Spacious office space available for rent. Suitable for professional offices & class rooms /educational institution.

**416.918.9848/416.857.7603**

## HOUSE/BASEMENT FOR RENT

**MARKHAM & DENISON**

4 Bedrooms house for rent.

**STAINES&MORNINGSIDE**

2 Bedroom walkout basement for rent. 3 Bedrooms house for rent.

**Contact: 647.686.8590**

## HOUSE/BASEMENT FOR RENT

**ALTONA & FINCH**

3 Bedrooms in upstairs & 2 bed rooms in bsmt full house for rent. 3.5 washroom & parking. Close to bus stop, school & stores. Suitable for big family. No smoking & No pets. Avail immediately.

தொடர்புகளுக்கு: **647.535.5014**

## முதியோர் பராமரிப்பு

**SCARBOROUGH**வில் குறுகியகால மற்றும் நீண்ட கால முதியோருக்கான பராமரிப்பு வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு: **647.667.0482**

## JOB VACANCY

**BOOKKEEPER**(Full time)

**LOCATION-** MARKHAM & HWY7

**Requirement** -3 Years experien ce in bookkeeping. **(Quickbook)** If you're interested, please contact for more details.

**Contact : 416.879.8911**

# PRIVATE HOUSE FOR SALE

## WESTERN & SHEPPARD

3 Bedrooms semi detached house for sale. 4 Level. 2.5 washrooms. 2,300 Sq.Ft. Closed to all facilities & Food court. Avail. immediately.

**BEST DEAL - GOOD INVESTMENT**

மேலதிக தொடர்புகளுக்கு : **905.904.9616**

## நிலா திருமணசேவை

கனடாவில் வாழும் 30, 31 வயதுடைய மணமகன்களுக்கு தகுந்த மணமகள்களை கனடாவில் தேடுகிறோம். (Visit Visaவில் உள்ள மணமகளும்) கனடாவில் வாழும் 28, 29, 30 வயதுடைய Charted Accountant, Mechanical Engineer ஆக புணிபுரியும் மணமகன்களுக்கு தகுந்த மணமகளைத் தேடுகிறோம்.

தொடர்புகளுக்கு: **437.772.8129**




## CHEF & WAITRESS WANTED

**SCARBOROUGH**இலும் **DOWNTOWN**இலும் அமைந்துள்ள **ENGLISH PUB**இற்கு **minimum 5 years** Experienced **CHEF & WAITRESS** wanted immediately. **Full time / Part time**

**Please Contact : 416.566.9994**

# HOME MAINTENANCE

**உங்கள் வீட்டுத் தேவை எதுவாயினும் அழையுங்கள்**

- Basement
- Electric Work
- Plumbing work
- Painting
- Tile work
- Building Maintenance
- General Cleaning (Strip & Wax)
- Carpet, Shambo & Steam Cleaning
- Commercial, Industrial & Residential Cleaning.
- General Maintenance (Grass Cutting, Junk removal)
- Moving for residencial & Commercial (Local & Long distance)
- Airport Ride

போன்ற சகலவிதமான சேவைகளையும் உங்களுக்கு திருப்தி யான முறையில் குறைந்த செலவில் செய்து கொடுக்கப்படும்.

**416.333.5606/647.231.5606**



**wpm Property Management**
Unit #210 – 80 Corporate Dr, Scarborough, ON, M1H 3G5

**Available for Rent**

***Oshawa*** **-Hwy 2 / Trulls Rd - Bungalow (5Brm + 2Bath) [$3475/ month]**

***Whitby*** **-Des Newman / Twin Streams -Full ( 3 Brm + 3 Bath + Parking) ($3500/month)**

**Oshawa - Upper floor Bond/Mcmillan ( 3 Brm + 1 Bath ) Separate entry and laundry ( $2950/month)**

***Scarborough*** **- Morningside/Sheppard ( 2 Brm + 1 Bath ) ($1850/ month)**

**Niagara Falls - Lundy's Lane / Dorchester (4BR 3Bath $3200)**

**Available for Rent**

***Oshawa*** **- Harmony/ Olive - Basement (1Brm + 1 Bath + 1 parking) [$1450.00/month including utilities)**

***Scarborough*** **- Mccowan & Lawrence-Basement (2Brm + 1Bath) [$2,100/month)**

***Whitby*** **- Country Lane & Southwell Ave Basement (2Brm + 1Bath) [$1600/month]**

***Mississauga*****-Confederation / Burnhamthorpe - Condo (1Brm + 1Bath) [$2300/month]**

**Scarborough - Morningside/Lawrence main floor(3 Bm + 1 Bath) ($2800)**

**BUY / SELL/ LEASE / INVEST**

- வீடு ஒன்றை வாங்கி வாடகைக்கு விட்டு வருமானம் தேட விரும்புகிறீர்களா?
- வாடகைக்குக் கொடுக்கும்போது சரியானவர்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்வது என்ற குழப்பம் அல்லது பயம் இருக்கிறதா?
- இப்போது வசித்துவரும் வீட்டில் இருந்தே கடன் பெற்று இன்னுமொரு வீட்டை எப்படித் தெரிவு செய்து வாங்குவது என்று அறிய விரும்புகிறீர்களா?
- வாடகைக்குக் கொடுத்திருக்கும் வீட்டின் வாடகைப் பிரச்சனைகளைக் கையாளத் தகுந்த நிறுவனத்தைத் தேடுகிறீர்களா?

**Real Estate & Property Management துறையில் 36 வருடங்கள் அனுபவமுள்ளவரைத் தொடர்பு கொள்ளலாம்.**

**கரு கந்தையா - 416.616.7278 Watson Property Management - 416.284.9999**

We are managing Condos, Houses, Apartments in the area of
Toronto, Markham, Ajax, Whitby, Oshawa, Clarington, Brampton, Hamilton, Beaverton, Trenton, and Kingston.

**இலங்கையில் (Sri Lanka)**
**வீடு, காணி, வியாபார நிலையங்கள்**
**வாங்க விற்க தொடர்புகளுக்கு**

**Lanka Global Real Estate**
170 Columbuthurai Rd
Jaffna
Email: sales@langaglobal.lk
Phone: 94-77-666-5513

**கரு கந்தையா** (கனடா)
Phone: 1-416-616-7278

**அரன் கந்தையா** (அவுஸ்திரேலியா)
Phone: 61-418-553-6613


# சூக்சுமதர்சினி – திரைவிமர்சனம்



ஆரணி ஞானநாயகன்

நஸ்ரியாவின் நடிப்பில் 2024ஆம் ஆண்டில் வெளியான மலையாள மொழிப் படம் இதுவாகும். சூக்சுமதர்சினி என்பது நுண்நோக்கியைக் (Microscope) குறிக்கும்.



இப்படத்தில் பிரியதர்ஷினி (நஸ்ரியா) தனது கணவனுடனும், மகளுடனும் வாழ்ந்து வருகிறார். அவரும் பக்கத்து வீடுகளில் வாழும் பிற பெண்களும் நன்றாகப் பழகி வருகின்றனர். வீட்டிலேயே இருக்கும் பிரியா வெளியில் வேலையைத் தேடிக் கொண்டிருக்கிறார். ஒருநாள் பிரியாவின் பக்கத்து வீட்டில் மனுவல் என்பவர் அவரது தாய் கிரேஸ்உடன் குடிபுகுகின்றார்.

மனுவல் தனது பக்கத்து வீட்டுக்காரர்களுடன் நன்றாகப் பழகத் தொடங்குகிறார். ஆனால், பிரியாவிற்கு மனுவல் மீது சந்தேகம் ஏற்படுகிறது. இந்த சந்தேகத்தைத் தெளிவு செய்ய அவரும் மற்றப் பெண்களும் செயல்படுகின்றனர்.

இவ்வாறு இருக்கையில் மனுவலின் தாய் தனது வீட்டைவிட்டு காணாமல் போகிறார். இதன் காரணம் அவரது மறதி நோயா? (Alzheimers) அல்லது வேறு பிரச்சினையா? என பிரியா தீர்மானிக்க முயலுகிறார்.

இதன் தீர்வு என்ன? பிரியாவின் சந்தேகம் சரியா? என இப்படத்தைப் பார்த்து அறியுங்கள்.

இப்படத்தில் கதையும், வடிவமைப்பும் நன்றாக அமைந்துள்ளது. கதாநாயகியை பிரதம கதாபாத்திரமாகக் கொண்டுள்ள துப்பறியும் கதை என்பது இப்படத்தின் சிறப்பாகும். பிரியா பிற பெண்களுடன் சேர்ந்து, தமக்கு சம்பந்தமில்லாத வேறு ஒருவரின் குற்றத்தைக் கண்டுபிடிப்பது வித்தியாசமாக இருந்தது. அத்தோடு படத்தில் கொலை நடந்தாலும் பெண்களுக்கு எதிரான வன்முறை மற்றும் கொடூர காட்சிகள் இல்லாதது நன்றாக இருந்தது.

படத்தில் கதாநாயகி, தோழிகள், பாதிக்கப்பட்டோர் எனப் பல பெண் கதாபாத்திரங்கள் இருந்தன. இவர்களது குணங்களும் நட்பும் சற்று விரிவாகப் படத்தில் காட்டியிருந்தால் படம் இன்னும் சிறப்பாக இருந்திருக்கும். இருந்தாலும் படம் என்ன நடக்கப் போகின்றது என்ற எதிர்பார்ப்புடன் செல்கிறது. மனுவலைத் தவிர வேறு ஆண்களுக்கு இப்படத்தில் பெரிதாக வேலையில்லை என்பதும் வித்தியாசமாக இருந்தது.



அத்துடன் படம் பார்வையாளர்களுக்கு விளங்க வைக்க முயலும் கருத்துகள் முக்கியமானவை. கதாநாயகி தனது உள்ளுணர்வை நம்புவது, ஒரே பாலின ஈர்ப்புக் கொண்டோர் அனுபவிக்கும் கஷ்டங்கள் போன்றவற்றை இப்படத்தின் கதை உணர்த்துகிறது. எனவே இப்படத்தை அனைவரும் பார்க்கலாம்.




# மீண்டும் இந்தி...

09ஆம் பக்கத்தொடர்ச்சி

ஏற்கனவே இந்தியைக் கற்பித்துவந்த 125 பள்ளிகளில் அது தொடர்ந்ததால், போராட்டங்களும் தொடர்ந்தன. இதனை அடுத்து, ஒரு கட்டத்தில் கட்டாயமாக இந்தி கற்பிப்பதை முடிவுக்குக் கொண்டு வர இந்தியாவின் வைசிராய் ஒப்புக் கொண்டார். 1940 பெப்ரவரி 21ஆம் திகதி இதற்கான அறிவிப்பு வெளியிடப்பட்டது. கட்டாய இந்தி ரத்து செய்யப்படுவதாகவும் விரும்பியவர்கள் வேண்டுமானால் படிக்க லாம் எனவும் அறிவிக்கப்பட்டது. இதை அடுத்து முதல் இந்தி எதிர்ப்பு போராட்டம் முடிவுக்கு வந்தது.

ஆனால், மீண்டும் காங்கிரஸ் ஆட்சிக்கு வந்ததும், மீண்டும் இந்தி திணிப்பு முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன.

## இரண்டாவது இந்தி எதிர்ப்பு போராட்டம்

இந்திய சுதந்திரத்துக்கு பின்னர், 1948 ஜூன் 20 அன்று பள்ளிக்கூடங்களில் இந்தி கற்பிப்பது குறித்து ஓர் அறிவிப்பை அன்றைய சென்னை மாகாண காங்கிரஸ் அரசு வெளியிட்டது. இந்த முறை, தமிழரிடையே எழும் எதிர்ப்பை மனதில் கொண்டு சென்னை மாகாணத்திலிருந்த மலையாளம், கன்னடம், தெலுங்கு பேசும் மக்கள் வாழும் பகுதிகளில் இந்தி கட்டாய பாடமாகவும் தமிழர் வாழும் பகுதிகளில் விருப்பப் பாடமாகவும் இந்தி அறிவிக்கப் பட்டது. ஆனாலும், வட இந்தியத் தலைவர்கள் வற்புறுத்தலுக்கு பின்னர் தமிழர் பகுதிகளிலும் இந்தி கட்டாயப் பாட மாக்கப்பட்டது. இதையடுத்து மீண்டும் இந்தி எதிர்ப்புப் போராட்டங்கள் தொடங்கின. இந்த முறை போராட்டத்தின் தலைமை நிர்வாகியாக சி.என். அண்ணா துரை நியமிக்கப்பட்டார். போராட்டத்தில் பெரியார், அண்ணா உள்ளிட்டோர் கைது செய்யப்பட்டனர். மாநிலம் முழுவதும் 144 தடைச் சட்டம் அமல்படுத்தப்பட்டு, இந்தி எதிர்ப்புப் போராட்டங்களுக்கு தடை விதிக்கப்பட்டது. பலர் கைது செய்யப்பட்டனர். இருந்தாலும் இந்தி கற்றுக்கொடுக்கும் பள்ளிக்கூடங்களை முற்றுகையிடுவது நீடித்துவந்தது.

இந்நிலையில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவராகயிருந்த காமராஜர், “பள்ளிக் கூடங்களில் இந்தி கட்டாய பாடமாக இருக்க வேண்டியதில்லை என்பது எனது கருத்து” என்றார். 1949ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் ஓமந்தூரார் பதவி விலகினார். இதை அடுத்து, பள்ளிக்கூடங்களில் இந்தி கட்டாய பாடமாக இருந்தது விலக்கிக் கொள்ளப்பட்டது. போராட்டமும் முடிவுக்கு வந்தது.

ஆனால், ஓமந்தூராருக்குப் பிறகு முதல்வரான பி.எஸ். குமாரசாமி ராஜா அமைச்சரவையில் கல்வி அமைச்சராக இருந்த மாதவ மேனன், 1950 மே 2 அன்று, பள்ளிக்கூடங்களில் இந்தி கட்டாய பாடமாக்கப்படும் என்ற அறிவிப்பை வெளியிட்டார். இந்த முறை சி.என். அண்ணாதுரை இதனைக் கண்டித்து அறிக்கை வெளியிட்டு, மிகப் பெரிய ஊர்வலம் ஒன்றை நடத்தப் போவதாக அறிவித்ததும் அரசு தன் முடிவிலிருந்து பின்வாங்கியது.

## மூன்றாவது இந்தி எதிர்ப்பு போராட்டம்

சுதந்தரத்துக்குப் பின்னர் இந்தியாவில் அரசமைப்புச் சட்டம் உருவாக்கப்பட்ட போது, இந்தியாவின் தேசிய மொழி எது என்பது குறித்து விவாதிக்கப்பட்டது. இந்தியை தேசிய மொழியாகவும் தேவநகரியை தேசிய எழுத்தாகவும் அங்கீகரிக்க வேண்டும் என இந்தியின் ஆதரவாளர்கள் கூறினர். இந்தி பேசாத மாநிலங்களைச் சேர்ந்தோர் இதனைக் கடுமையாக எதிர்த்தனர். ஆனால், முடிவில், இந்தியே இந்தியாவின் அலுவல் மொழியாக அரசமைப்புச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டது. அடுத்த 15 ஆண்டுகளுக்கு மட்டும் ஆங்கிலம் இணை அலுவல் மொழியாக விளங்கும் என்றும் அதன்பின்னர் இந்தி மொழி மட்டுமே அலுவல் மொழியாக இருக்கும் என்றும் சொல்லப்பட்டது. இந்தியாவின் புதிய அரசமைப்பு சட்டம் 1950 ஜனவரி 26 அன்று நடைமுறைக்கு வந்தது. ஆகவே அரசமைப்புச் சட்டத்தில் சொல்லியபடி, 15 ஆண்டுகள் கழித்து, 1965 ஜனவரி 26 முதல் இந்தி மட்டுமே அலுவல் மொழியாக இருக்கும் சூழல் ஏற்பட்டது.

இதனால், 1963இலேயே, தமிழ்நாடு மீண்டும் இந்தி எதிர்ப்புப் போராட்டத்துக்கு தயாரானது. 1964ஆம் வருடம் முழுவதும் போராட்டங்கள் நடந்தன. போராட்டங்களில் அரசமைப்புச் சட்டத்தின் பிரிவு 17 எரிக்கப்பட்டது. தலைவர்கள் பலரும் கைது செய்யப்பட்டனர். அண்ணாவும் சிறையில் அடைக்கப்பட்டார். இந்தத் தருணத்தில் திருச்சி ரயில் நிலையத்திற்கு முன்பாக சின்னச்சாமி என்பவர் “தமிழ் வாழ்க, இந்தி ஒழிக” என்று கூறியபடி தீக்குளித்து உயிரிழந்தார். 1965 ஜனவரி 26 இந்திய குடியரசு தினத்தை துக்க தினமாக கடைபிடிக்கப்போவதாக அறிவித் தது திமுக. மாணவர்கள் போராட்டத்தில் இறங்கினர். சென்னையில் மெரீனா கடற்கரையில் திரண்ட மாணவர்கள் இந்தி புத்தகங்களை எரித்தனர். மதுரையில் ஊர்வலமாகச் சென்ற மாணவர்கள் காங்கிரஸ் அலுவலகத்தைத் தாக்கினர். மாநிலம் முழுவதும் போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் மீது தடியடி நடத்தப்பட்டது. அண்ணாமலை பல்கலைக் கழக மாணவர்கள் நடத்திய ஊர்வலத்தில் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. அதில் ராஜேந்திரன் என்ற மாணவர் உயிரிழந் தார். இதனையடுத்து போராட்டம் உச்சக் கட்டத்தை எட்டியது. ரயில்கள் நிறுத்தப் பட்டன. பல இடங்களில் பேருந்துகள் எரிக்கப்பட்டன. மாணவர்கள்மீது துப்பாக் கிச் சூடு நடத்தப்பட்டது. 1965இல் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் 500இற்கும் மேற்பட்டோர் மரணமடைந்தனர்.

இந்நிலையில், தமிழ்நாட்டைச் சேர்ந்த



ஒன்றிய அமைச்சர்களான சி. சுப்பிரமணிய மும் ஓ.வி. அளகேசனும், இந்தித் திணிப்புக்கு எதிராகவும் இணைப்பு இந்தியா முழுவதும் இணைப்பு மொழியாக ஆங்கிலமே தொடர வேண்டுமெனவும் கூறி பதவி விலகினர். இதனையடுத்து, அன்றைய இந்தியப் பிரதமர் லால் பகதூர் சாஸ்திரி, “மக்கள் எவ்வளவு காலம் வேண்டுமோ அவ்வளவு காலத்திற்கு ஆங்கிலத்தை ஒரு மாற்று மொழியாக வைத்திருக்க விரும்புகிறேன். ஆங்கில த்தை இணைப்பு மொழியாக வைத்திருக் கும் முடிவை நான் இந்தி பேசும் மக்களிடம் விடாமல், இந்தி பேசாத மக்களிடம் விடப்போகிறேன்” என்று குறிப்பிட்டார்.

பிரதமரின் இந்த உறுதிமொழியையடுத்து தமிழ்நாட்டில் போராட்டங்கள் கட்டுக்குள் வர ஆரம்பித்தன. மாணவர்கள் தங்கள் போராட்டத்தை காலவரையின்றி ஒத்தி வைத்தனர். ஓ.வி. அளகேசனும் சி. சுப்பிரமணியமும் தங்கள் பதவி விலகலை திரும்பப் பெற்றனர். மாணவர்கள் மீதான வழக்குகளும் திரும்பப் பெறப்பட்டன.


## நான்காவது இந்தி எதிர்ப்பு போராட்டம்

இந்தியாவின் பிரதமராக ராஜீவ் காந்தி இருந்த காலகட்டத்தில் 1986ஆம் ஆண்டில் தேசிய கல்விக் கொள்கையை அறிமுகப்படுத்தினார். அதன்படி நாடு முழுவதும் நவோதயா பள்ளிகள் தொடங்கப்பட்டன. இந்தப் பள்ளிகளில் இந்தி கட்டாயம் என்பதால் தமிழ்நாட்டில் திமுக அதனைக் கடுமையாக எதிர்த்தது. அரசமைப்பு சட்டத்தின் 17ஆவது பிரிவை திமுகவினர் எரித்தனர். அன்றைய திமுக தலைவர் மு. கருணாநிதி உட்பட ஆயிரக் கணக்கானவர்கள் சிறையில் அடைக்கப் பட்டனர். இதையடுத்து தமிழ் நாட்டில் இந்தி திணிக்கப்படாது என வாக்குறுதி அளித்தார் ராஜீவ் காந்தி. இதற்குப் பிறகு போராட்டம் முடிவுக்கு வந்தது. இதற்குப் பிறகு இன்றுவரை தமிழ்நாட்டில் நவோதயா பள்ளிக்கூடங்கள் அனுமதிக்கவேபடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஆனால், இதன்பின்னரும் காங்கிரஸ் ஆட்சியில் இருந்தபோதும் சரி, நரேந்திர மோடி தலைமையில் பாஜக ஆட்சிக்கு வந்தபிறகும் சரி, பல்வேறு வகைகளில் தமிழ்நாட்டில் இந்தியைத் திணிக்க ஒன்றிய அரசு முயற்சிப்பதும் அதற்கு தமிழ்நாடு எதிர்ப்பு தெரிவிப்பதும் பின்வாங்குவ தாதுமாகவே வருடங்கள் ஓடுகின்றன.

இந்நிலையில்தான், புதிய தேசிய கல்விக் கொள்கை என்னும் பெயரில் மீண்டும் இந்தி திணிப்பு முயற்சியில் இறங்கி இருக்கிறது ஒன்றிய பாஜக அரசு. மறைமுக இந்தி திணிப்பு என ஒன்றிய அரசின் மும்மொழிக் கொள்கையை ஏற்றுக்கொள்ளாத தமிழ்நாட்டின் பள்ளிக் கல்வித் துறைக்கு தரவேண்டிய நிதியை நிறுத்தி வைத்திருக்கிறது. இந்தித் திணிப்புக்கு எதிரான போராட்டங்கள் தமிழ் நாட்டில் ஆங்காங்கே மீண்டும் நடைபெற ஆரம்பித்துள்ளன. ரயில் நிலையங்களில் இந்தி எழுத்துகளை அழிக்கும் போராட்டத் தில் திமுகவினர் இறங்கி உள்ளனர். “தமிழ்நாட்டின் வரி வருவாயை ஒன்றிய அரசுக்கு தரமாட்டோம் என்று சொல்ல ஒரு நொடி போதும்” என்று கூறியுள்ளார் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின். “ஆங்கிலேயர் ஆட்சிக்கு எதிராக காந்தி யால் நடத்தப்பட்ட வரி கொடா இயக்கத்தை இப்போதும் நடத்துவோம் ஆட்சியே கலைக்கப்பட்டாலும் எதிர் கொள்வோம்” என்பது திமுகவினர் அறை கூவலாக இருக்கிறது.

தமிழ்நாட்டில் அடுத்த ஆண்டு சட்டசபைத் தேர்தல் நடைபெற உள்ளது. எனவே, தேர்தலை கணக்கில்கொண்டு விரைவில் தன் உறுதியில் இருந்து ஒன்றிய அரசு பின்வாங்கும் என்றே அரசியல் பார்வை யாளர்கள் கூறுகின்றனர். ஆனால், அதற்குப் பின்னர் மீண்டும் இந்தித் திணிப்பு எனும் வேதாளம் வெளியே வரும், தமிழ்நாடு அதற்கு எதிராக வழக்கம்போல் போராடும் என்பதுமே அவர்கள் கணிப்பாக இருக்கிறது.




Vlambaram - March 01, 2025.qxp_Vlambaram-Front 2025-02-28 7:11 PM Page 19



# கவிஞர் விநாயகர் கந்தவனத்தோடு எனக்கேற்பட்ட அனுபவங்கள்



K. ANANTHANATHAN,
MA, MSW, RSW (Registered Social Worker with OCSWSSW)
kananthan2003@gmail.com

"அமரர் இலக்கிய கலாநிதி கவிஞர் விநாயகர் கந்தவனத்தோடு எனக்கேற்பட்ட மறக்கமுடியாத சில அனுபவங்கள்"

யாழ்-வசாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தில் 1963-1969 காலப் பகுதியில் குறிப்பாக எட்டாம் வகுப்பில் படிக்கும் போது அமரர் கவிநாயகர் கந்தவனம் எனக்கு புவியியலும் ஆங்கிலமும் படிப்பித்ததோடு எனது வகுப்பாசிரியராகவும் விளங்கியவர். குறிப்பாக அமரர் கவிநாயகர் நல்லாசிரியராகவும் நல்ல பல்லாளுமைமிக்கவராகவும் (Multi-Skills) அக்காலத்திலும் இக்காலத்திலும் வாழ்ந்தவர். குறிப்பாக அக்காலப் பகுதியில் அவர் ஏற்படுத்திய ஒழுக்கத் தாக்கங்கள் எனது மனத்தில் இன்றும் பசுமையாக இருக்கின்றன. சுருங்கக்கூறின் தாரமும் குருவும் அவரவரது தலையெழுத்து என்னும் கூற்றுக்கிணங்க அமரர் கவி நாயகர் கந்தவனத்தை எனது இடை நிலைப்பள்ளி ஆசிரியராகக் கொண்டமை எனது வாழ்க்கையில் பெரிய பாக்கியமே என்று கூறவேண்டும்.

"எழுத்தறிவித்தவன் இறைவனாவான்" என்னும் ஔவையாரின் கூற்றின்படி அமரர் கவிநாயகர் கந்தவனத்தின் மாணவ - ஆசிரியத் தொடர்பு ஒரு தெய்வீகத் தொடர்பாகும். அதாவது அவரது மாணவ - ஆசிரியத் தொடர்பு கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என ஒரு தெய்வீகத்தன்மை நிறைந்ததாக அமைந்திருந்தது. அவர் எப்போதும் "Do not waste your time. Do something" என்று கூறியதை அவரது வாழ்க்கையின் அடிப்படைத்



மண்ணில் October 28, 1933 — விண்ணில் March 11, 2024

தத்துவமாகக்கொண்டு கனடாவிலும் தனது வாழ்வின் இறுதிமூச்சுவரை செயற்பட்டு வந்தவர். எனது பால்ய நண்பரான சிவா முத்துலிங்கம், செயலாளர், ஒன்ராறியோ இந்துசமயப் பேரவை, குறிப்பிட்டதுபோல அமரர் ஒன்ராறியோ இந்துசமயப் பேரவையில் பல ஆண்டுகளாகத் தலைவராகப் பணியாற்றியவர். இச்சபையின்மூலம் இந்துசமயத்தையும், தமிழ்மொழியையும் கனடாவில் வளர்க்கப் பல திட்டங்கள் வைத்திருந்ததாகவும் அவற்றையெல்லாம் நிறைவேற்றமுடியாமல் போய்விட்டதாகவும் மனம் வருந்திக் கூறினார். ஜப்பானியப் பேராசிரியர், "கனடாவில் இந்துசமயத்தையும் தமிழையும் புலம்பெயர்ந்த ஈழத்தமிழர் வளர்ப்பதில் பெரும்பங்காற்றுகின்றனர்" என்பதைக் குறிப்பிட்டதில், கவிநாயகர் கந்தவனத்தின் பங்கு அளப்பரியதாகும். இன்று அமரரது மறைவு பெரும் வெற்றிடத்தை ஏற்படுத்தி உள்ளதென்றே குறிப்பிடவேண்டும். அவர் எப்போதும் அதிகாலை 4 மணிக்கே எழுந்து தனது எல்லாக் காலைக்கடமைகளையும் முடித்து விட்டு எட்டு மணிக்கு வசாவிளான் (MMV) மத்திய மகா வித்தியாலயத்துக்கு வந்துவிடுவார். அவர் எப்போதும் எமக்குக் கூறும் கூற்று என்னவெனில் அதிகாலையில் வசாவிளான் எம்எம்விக்குள் கால் எடுத்துவைக்கும்போது ஓர் ஆலயத்திற்குள் காலெடுத்து வைக்கும் உணர்வைத்தான் பெறுவதாகக் குறிப்பிடுவார். அதாவது அமரர் இலக்கிய கலாநிதி விநாயகர் கந்தவனத்தின் கல்விப் பணி குறிப்பாக அமரரின் ஆசிரியப்பணி உன்னத ஒழுக்க விழுமியங்களை அடிப்படையாகக் கொண்டமைந்தது.

"குஞ்சி யழகும் கொடுத்தானைக் கோட்டழகும்
மஞ்சள் அழகும் அழகல்ல – நெஞ்சத்து
நல்லம்யாம் என்னும் நடுவு நிலைமையால்
கல்விஅழகே அழகு" என்னும் நாலடியார் பாடலுக்கு இலக்கணமாகவும்

"கேடுஇல் விழுச்செல்வம் கல்வி யொருவற்கு
மாடலல்ல மற்றயவை" (–குறள்–400)

அதாவது "ஒருவருக்கு அழிவில்லாத சிறந்த செல்வம் கல்வியே. மற்றையவை எல்லாம் செல்வங்கள் ஆகா" என்னும் குறளில் உறுதியாக நம்பிக்கைகொண்டு தனது இறுதிமூச்சுவரை வாழ்ந்தார்.

கவிநாயகர் கந்தவனம் எந்தவித சாதி வேறுபாடுகளையும் கடந்து "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என, மாணவர்களைத் தரம் மட்டுமேகொண்டு கணித்து அவர்களது கல்வி வளர்ச்சியில் தனது நுண்ணறிவினால் ஊக்கமளித்தவர். 2024 மார்ச் 16ஆம் திகதி நடைபெற்ற அவரது இறுதி அஞ்சலிக் கூட்டம் காணொளியில் நடைபெற்றது.அவரது இரங்கல் செய்தியில் அவரது பன்முகப்பட்ட ஆற்றல்களையும் பரிணாமங்களையும் அவரது "அன்ன சத்திரம் ஆயிரம் கட்டுதல் ஆலயம் பதினாயிரம் நாட்டுதல் அன்னயா வினும் புண்ணியம் கோடி ஆங்கோர் ஏழைக்கு கல்வி புகட்டுதல்" தலையாய தர்மம் என்னும் மகாகவி பாரதியின் கூற்றுக்கு இணங்க அமரர் கவிநாயகர் தான் கல்வி கற்பித்த இடங்களில் எல்லாம் மாணவர்களது வாழ்வில் ஒளியேற்றிவைத்த பெருந்தகையாளன் அமரர் கவிநாயகர் கந்தவனம் என்றால் அது மிகையாகாது.

குறிப்பாக என் இள வயதிலேயே தலை சிறந்த பண்புகளையும் ஆளுமைகளையும் தந்ததை, அவரது பழைய மாணவர்களும் நண்பர்களும் புகழ்ந்து கூறியதைக் கேட்டு உள்ளம் பூரிப்படைந்தேன். இதற்குச் சான்றாக மலையகத்திலும், நைஜீரியாவிலும், அளவெட்டியிலும் யாழ்ப்பாணத்திலும் அவரது பழைய மாணவர்களுக்கும் அவர்களது கல்வி வாழ்வில் நான் உட்பட அவர் உதவியதை மறக்கமுடியாது.

எவ்வாறு நேரநிர்வாகம் செய்து நாம் வாழ்வில் முன்னேற எப்போதும் ஏதாவது ஒன்றைச் செய்து கொண்டிருத்தல் வேண்டும் என்பதையும் காலத்தை ஒரு போதும் வீணாக்கக்கூடாது என்பதையும் தெரிந்துகொண்டு முன்னேற எமக்கு உதவியது. இவ்விடயத்தில் ஆங்கிலத்தைப் படி என்று கூறியதோடு தன்னால் முடிந்த மட்டும் ஊக்குவித்தார். இன்று நான் கனடாவந்து 3 பல்கலைக்கழகங்களில் M.A., Ph.D. மாணவனாக வருவதற்கு அவர் ஆங்கில மொழியில் போட்ட அத்திவாரமே என்று பெருமையாகக் கூறுவேன். அவரது ஆங்கிலமொழி ஆளுமை எம்மையெல்லாம் ஊக்குவித்தது என்பதில் எந்தவித சந்தேகமுமில்லை.

சுருங்கக்கூறின் அமரர் கவிநாயகர் கந்தவனம் ஆசிரியரோடு ஏற்பட்ட அனுபவத்தைப் பின்வருமாறு குறிப்பிடலாம். அவரது வார்த்தைகளில் கூறுவதானால் "Discipline is discipline. There is no compromise for discipline" எனலாம். அதாவது ஒழுக்கம் என்பதன் அர்த்தம் ஒழுங்கந்தான். அதற்கு எந்த விதமான சமரசமும் கிடையாது. ஒழுக்கம் தவறினால் சிறைக்குத்தான் செல்ல வேண்டும். அங்கேதான் உங்கள் வாழ்வு முடியும் என்பதில் ஆணித்தரமான நம்பிக்கைகொண்டு அதன்படி ஒழுகுகின்றவர்களுக்கு ஓர் உதாரணமாக வாழ்ந்து காட்டியவர் கவிநாயகர் கந்தவனம். அமரரின் பன்முகஆளுமைகளை வியந்து கூறியவற்றில் பின்வரும் பண்புகளைச் சிறப்பாகக் குறிப்பிடலாம்.

## இந்துசமயப்பணி

உலகளாவிய இந்துசமயப்பணி - அதாவது புலம்பெயர்ந்த நாடுகளில் ஆற்றிய இந்துசமயப்பணி, குறிப்பாகக் கனடா, ஜேர்மனி ஆகிய நாடுகளைக் குறிப்பிடலாம்.

## எளிமையும் அடக்கமும்

அவரது குடும்பப்பொறுப்பும் சேவை மனப்பான்மையும் மிகவும் நல்லடக்கமான கட்டுப்பாடுடன்கூடிய ஒழுக்கநெறி முடிவாகக் கூறுவதாயின் "In conclusion Bhagavad Gita says, " Late Kavinayakar Kandavanm's soul will never die because of his devoted teaching and selfless actions.

இக்கட்டுரையில் மேற்கூறிய அமரரது பண்புகளும், குணாம்சங்களும் வெறும் முகமனுக்காகக் கூறிய உபசார வார்த்தைகள் அல்ல. உண்மையில் அமரர் கவிநாயகர் கந்தவனத்தோடு பழகிய எம்மைப் போன்ற எல்லோரது அனுபவத்தில்கண்ட உண்மைகளாகும்.

## படித்ததில் பிடித்தது



நீங்கள் வாசித்து மகிழ்ந்ததை
மற்றவர்களும் வாசிக்கட்டுமே.
அனுப்புங்கள் Vlambaram@sympatio.ca
யாம் பெற்ற இன்பம் மற்றவர்களும் பெறட்டுமே!

## உணவு பழக்கம்

- வாழை வாழ வைக்கும்.
- அவசர சோறு ஆபத்து.
- சித்தம் தெளிய வில்வம்.
- சிறுநீர் கடுப்புக்கு அன்னாசி.
- ஜீரண சக்திக்கு சுண்டக்காய்.
- பித்தம் தணிக்க நெல்லிக்காய்.
- பருமன் குறைய முட்டைக்கோஸ்.
- தேனுடன் இஞ்சி ரத்தத் தூய்மை.
- தலைவலி நீங்க முள்ளங்கி சாறு.
- உஷ்ணம் தவிர்க்க கம்பங் களி.
- சூட்டை தணிக்க கருணை கிழங்கு.
- பூண்டில் இருக்கு பென்சிலின் சக்தி.
- மூல நோய் தீர வாழைப்பூ கூட்டு.
- வாந்திக்கு மருந்து மணத்தக்காளி.
- வாத நோய் தடுக்க அரைக் கீரை.
- வாய் துர்நாற்றம் தீர்க்க ஏலக்காய்.
- ரத்த கொதிப்புக்கு அகத்திக் கீரை.
- கல்லீரல் பலம் பெற கொய்யாப் பழம்.
- குடல் புண் நலம் பெற அகத்திக்கீரை.
- இருமலை போக்கும் வெந்தயக் கீரை.
- தன் காயம் காக்க வெங்காயம் போதும்.
- ஆறிய உணவு மூட்டு வலி உண்டாக்கும்.
- இரைப்பை புண்ணுக்கு எலுமிச்சை சாறு.
- போன ஜுரத்தை புளி இட்டு அழைக்காதே.
- கொலஸ்ட்ரோல் குறைக்க பன்னீர் திராட்சை.
- காட்டிலே புலியும், வீட்டிலே புளியும் ஆளைக் கொல்லும்.
- சீரகம் இல்லா உணவும், சிறு குழந்தைகள் இல்லா வீடும் சிறக்காது.




- காந்தன் -

உணவு மருந்தாக இருக்க வேண்டும் இல்லாவிட்டால் மருந்தே நமக்கு உணவாகும் நிலைமை உருவாகும்" நலம் உடன் வாழ்வோம்.

Vlambaram - March 01, 2025.qxp_Vlambaram-Front 2025-02-28 7:11 PM Page 20



# உள்ளத்தின் குரலைக் கேட்க

**Words of Peace**
பிரேம் ராவத் பற்றி மேலும் அறிந்துகொள்ள:
www.timelesstoday.com
www.premrawat.com

பிரேம் ராவத் ஃபவுண்டேஷனின் நிறுவுநர் ஸ்ரீ பிரேம் ராவத் உலகெங்கனும் வாழும் மக்களிடையே சென்று அவர்களோடு உரையாடி சாந்தியையும் சமாதானத்தையும் எவ்வாறு நமக்குள்ளே தேடிக் காணலாம் என ஆற்றுப்படுத்தும் ஆத்மிகத் தூதுவர் ஆவார்.

வட இந்தியாவின் ஹரித்துவாரில் பிறந்த இந்த மெஞ்ஞானி, இளமைப் பருவத்தில், ஒரு கத்தோலிக்கப் பள்ளியில் ஆங்கில மொழி மூலம் கற்றவர்.

எம்முள்ளே சமாதானத்துக்கான தேடல் - இயல்பாகவே - இருக்கிறது. ஆனால் ஆரவாரம் மிக்க உலகின் இரைச்சலில் நாம் அதை உற்றுக் கேட்பதில்லை. நம் அந்தராத்மாவின் அழைப்புக்குச் செவி சாய்ப்பதில்லை.

“ஆத்மாவின் குரலை உற்றுக் கேளுங்கள்!” என்ற செய்தியை இந்தச் சாதகர் ஆபிரிக்கா, ஜப்பான் உள்ளிட்ட உலகநாடுகள் தோறும் சொல்லி வருகிறார். “Peace is Possible” என்ற அவர் எழுதிய நூல் பல்லாயிரம் வாசகர்களைச் சென்றடைந்துள்ளது.

அன்றாட வாழ்க்கைக்கு அப்பால் ஒரு பிரக்ஞை இருக்கிறது என்பதை வரலாற்றின் ஒரு கட்டத்தில் மனிதன் உணர்ந்தான். “உன்னையே நீ அறிவாய்!” என்று சொன்னவர் கிரேக்க தத்துவஞானி சோக்கிரதீஸ் இவ்வாசகம் டெல்ஃபியில் உள்ள அப்பொலோவின் ஆலயத்தில் பொறிக்கப்பட்டுள்ளது.

“நீ யார்?” ஒருவரை வினவினால் உடனடியாகப் பதில் கிடைக்காது. “நான் யார் என்னுள்ளளமார், என் ஞானங்களார் என்னை யாரறிவார்?” என்று கேட்பார் மணிவாசகர்.

யோகர் சுவாமிகளோ மிகத் தெளிவான பதில் தருகிறார். “நீ உடம்பன்று, மனமன்று, புத்தியன்று, சித்தமன்று, நீ ஆத்மா!” என்ற அவர் கூற்று நீ யார்?” என்பதற்கு ஏற்ற பதிலா கிறது. இந்த இடத்தில்தான் பிரேம் ராவத் தமது தேடலைத் தொடங்குகிறார். “உன்னை அறிந்துகொள்ளல் ஞானத்தின் முதற்படி!” என்ற அரிஸ்ரோற்றலின் கூற்றில் ஆரம்பிக்கிறார். தன்னை அறிவது அமைதி, இன்பம், தெளிவு, அன்பு, நிறைவு - எல்லாவற்றுக்கும் ஊற்று, அடிப்படை. இந்நிலை வேறு எதிலும் - எவரிலும் - தங்கியிராதது. அஃது உனக்கே உரியது என்கிறார்.

மிகப் பழங்காலத்திலிருந்து மக்கள் மூச்சுக்கும் அந்தராத்மாவுக்கும் ஒரு தொடர்பிருப்பதாக நம்பினர். ‘றுஆ’ என்ற ஹீப்றூ சொல்லுக்கு ‘ஆவி’ ‘மூச்சு’ ‘காற்று’, என்றெல்லாம் பொருளுண்டு.

இந்நாளில் நாம் சிந்திப்பதில் நம் முழுக்கவனத்தையும் செலுத்தி ‘மூச்சு’ என்பதை மறந்து விடுகிறோம். பதினாறாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஞானி துளசிதாஸ் “மயக்கம் நிறைந்த சமுத்திரத்தைத் தாண்டும் ஓடம் இந்த உடம்பு. உள்வந்து வெளிச் செல்லும் மூச்சு எனக்கு வாய்த்த ஆசீர்வாதம்!” என்கிறார்.

நாம் என்ன திட்டமிட்டாலும், எது செய்தாலும் நிகழ்காலத்தில்தான் வாழ்கிறோம்! இந்த நிகழ்காலத்தை எப்படிப் பயன்படுத்த வேண்டும்? ஆங்கிலக் கவிஞர் William Blake இரு நூற்றாண்டுக்கு முன் சொன்னது இது.

**“ஒரு மணற்பருக்கையில் உலகைப் பார்ப்பதும் ஒரு வனமலரினில் சொர்க்கத்தைக் காண்பதும் உள்ளங்கையில் எல்லையில்லாததைப் பற்றிப் பிடிப்பதும் ஒரு மணி நேரத்துள் நித்தியத்துவத்தை அடக்குவதும்”** அவர் காட்டும் வாழும்வழி.

சலனங்களெல்லாம் தவிர்ந்த நிலையில் இது கைகூடும். அமைதியான மன நிலையில் இருக்கும்போது, எம்மால் எம்மை அறியமுடியும். ‘உன்னையே நீ அறிவாய்!’ என்பதற்குப் பொருள், உன்னுள்ளே இருக்கும் பிரபஞ்சத்தை அனுபவி என்பதே. அப்போது எல்லை இல்லா மனஅமைதி உண்டாகும். சத்தமும் ஆரவாரமும் மிக்க உலகில் ஒரு மகிழ்ச்சியான மனநிலை உண்டாகும். எப்படி உனக்குப் பசிக்கும்போதும் உறக்கம் வரும்போதும் உடல் தெரிவிக்கிறதோ, அதுபோலவே, உன் இதயம் மகிழ்ச்சியால் நிறையும்போது உனக்குத் தெரியவரும். அது சொல்லும் கவிதை உன் காதில் இனிமையாக ஒலிக்கும்.

அறிவு என்பது தான் என்ன? பிரேம் ராவத் விளக்குகிறார். “விளக்கமளிப்பது அறிவு அல்ல. உன்னுள் இருக்கும் தெய்விகத்தை அநுபவிப்பதே அறிவு!” கிரேக்க நாடக ஆசிரியன் யூறிப்பிடிஸ் “கெட்டித்தனம் ஞானம் அல்ல” என்றான். ஒருவன் தன் சிந்தனைகளுக்கும் உணர்வுகளுக்கும் இடையே சமநிலை பேணினால் நன்மை உண்டாகும்.

“உள்ளத்தின் அமைதி என்ற விலை மதிப்பில்லா செல்வம் வேண்டுமெனில், உங்களுக்குள்ளே நோக்குங்கள். அது எங்கும் விற்பனை செய்யப்படுவதில்லை. எந்த அரசாங்கமும் அதற்குக் கட்டுப்பாடு விதிப்பதில்லை. உங்களிடமிருந்து யாரும் அதைக் களவாடமுடியாது. புற உலகைப் பார்க்க, கேட்க, சுவைக்க நாம் எடுக்கும் முயற்சியை நம் அகத்தை நோக்கித் திருப்பிப் பாருங்கள். ‘அக உலகம்’ உங்கள் முன் விரியும் அங்குள்ள சக்தியை உணர்வீர்கள்” என்கிறார் பிரேம்.

“இருளைப் பழிப்பதைவிட ஒரு விளக்கை ஏற்றுவது நல்லது” என்றொரு முதுமொழி உண்டு. பிரச்சினைகள் எங்களைச் சூழும் போது, ஒரு மூலையில் உட்கார்ந்து அழக் கூடும் ஆனால் ஒரு கட்டத்தில் “பட முடியாதினித் துயரம்” என்று மனம் சொல்லும். அவ்வேளையில், துணிச்சலை வரவழைத்து அந்த விளக்கைக்கொண்டு மற்றொரு விளக்கு, அதைக்கொண்டு வேறொரு விளக்கு. வீடே ஒளி வெள்ளத்தில். முதலில் நாம் ஏற்றிய விளக்கால் அது சாத்திய மாயிற்று.

14ஆம் நூற்றாண்டில் காஷ்மீரில் வாழ்ந்த ஒரு பெண் கவி பாடினார்.

**“நீ மண்ணாக, விண்ணாக, காற்றாக
பகலாக, இரவாக
தானியமாக, சந்தனமாக
நீராக, மலர்களாக, மற்றெல்லாமாக இருக்கிறாய்
உனக்கு நிவேதனமாக
நான் எதைக் கொணரலாம்?”**

**“எள்ளுக்குள் எண்ணெய் இருப்பதுபோல
சிக்கிமுக்கிக் கல்லில் தீயிருப்பதுபோல
உன்னுள் தெய்வீகம் இருக்கிறது
அதைக் கிளர்ந்தெழச் செய்வீர்!”** என்றார் கபீர்.

இதுவே பிரேம் ராவத் உலகுக்கு விடுக்கும் செய்தி!

- முனைவர் சோ.பத்மநாதன் - தலைவர் சைவ வித்தியா விருத்திச் சங்கம் திருநெல்வேலி.

## பிராம்ப்டன் ...

06ஆம் பக்கத்தொடர்ச்சி

அமைக்கும் திட்டம் மீண்டும் வந்துள்ளது, மேலும் முன்னெப்போதையும்விட சிறப்பாக உள்ளது. இது குடியிருப்பாளர்கள் நிபுணத்துவம் வாய்ந்த தோட்டக்காரர்களிடமிருந்து கற்றுக்கொள்ள அதிக வாய்ப்புகளை வழங்குகிறது. எங்கள் அர்ப்பணிப்புள்ள நிதியுதவியாளர்கள் மற்றும் கூட்டாளர்களின் ஆதரவுடன், பங்கேற்பாளர்கள் நேரடி அனுபவத்தைப் பெறுவதன்மூலம் தங்கள் தோட்டக்கலைத் திறன்களை வளர்த்துக் கொள்ளவும் வாய்ப்புக் கிடைக்கும். அர்த்தமுள்ள சமூக தொடர்புகளை உருவாக்கும் அதேவேளையில், தங்கள் சொந்த புதிய விளைபொருட்களை வளர்க்க அவர்களுக்கு அதிகாரம் அளிக்கிறது. இந்தத் திட்டம் அனைத்து குடியிருப்பாளர்களுக்கும் தாக்குப்பிடிக்கும் தன்மை மற்றும் உணவுப் பாதுகாப்பிற்கான நகரத்தின் உறுதிப்பாட்டை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. பதிவுசெய்தல் தொடங்கி உள்ளது, எனவே உங்கள் தோட்டக்கலை திறன்களை மேம்படுத்தவும், தேவைப்படுவோருக்கு அர்த்தமுள்ள மாற்றத்தை ஏற்படுத்தவும் இந்த வாய்ப்பைத் தவற விடாதீர்கள்.”


**பற்றிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்டன் நகரம்**

“கொல்லைப்புறத் தோட்டம் அமைக்கும் திட்டம் என்பது நமது சமூக உணர்வை வலுப்படுத்தவும், தோட்டம் அமைப்பதன் பல பலன்களைக் கண்டறிய குடியிருப்பாளர்களுக்கு உதவவும் ஓர் அற்புதமான வழியாகும். இன்னும் அதிகமான குடியிருப்பாளர்கள் தங்கள் சொந்தத் தோட்டங்களைத் தொடங்க, ஊக்குவிக்கும் வகையிலான புதிய அம்சங்களுடன் இத்திட்டத்தை மீண்டும் தொடங்குவதில் நாங்கள் சிலிர்த்துப் போகிறோம். விளைபொருட்களை வளர்க்கக் கற்றுக் கொள்வது மட்டுமல்லாமல், குடியிருப்பாளர்கள் தங்கள் ஆரோக்கியத்தையும் மேம்படுத்தலாம், உணவுச் செலவுகளைக் குறைக்கலாம் மற்றும் தாங்கள் அறுவடை செய்தவற்றில் சிலவற்றை சமூகத்திற்கு நன்கொடையாக வழங்கலாம். நிபுணர் வழிகாட்டுதல் மற்றும் அத்தியாவசியப் பொருட்களைப் பெறும் பங்கேற்பாளர்கள், தங்கள் வெற்றிக்காகத் தயாராவார்கள் மற்றும் தங்களின் பேரார்வத்தைப் பகிர்ந்து கொள்ள சமூகத்துடன் இணைக்கப்படுவர்.

– ரொவீனா சான்ட்டோஸ், பிராந்திய கவுன்சிலர், வார்டுகள் 1 ஆ 5 தலைவர், சமுதாயச் சேவைகள் துறை, பிராம்ப்டன் நகரம்

கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான பிராம்ப்டன் தன் வசத்தில் 700,000 மக்களையும் 100,000 வணிக அமைப்புகளையும் கொண்டிருக்கிறது. நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல் ரீதியிலான புதுமை படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்று கொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்க வல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கிய மிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். X (முன்னதாக Twitter), Facebook, LinkedIn மற்றும் Instagram ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். www.brampton.caஇல் இன்னும் தெரிந்து கொள்ளுங்கள்.

உலகத்தின் செல்வம் முழுவதையும் செலவழித்தாலும் "திருப்தியை" விலைக்கு வாங்க முடியாது.



அழத் தெரியாதவன் அல்ல
கண்ணீரை மறைத்து வைக்கத் தெரிந்தவன்
பணம் தேடுபவன் அல்ல
தன் குடும்பத்திற்காகத் தன்னிலை மறந்து ஓடுபவன்
சிரிக்கத் தெரியாதவன் அல்ல
சிரிக்க மறந்து சிந்தனையில் ஆழ்ந்திருப்பவன்